# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 16.10.2021 supeedsam.com supeedsam@gmail.com







# அமைச்சர் டக்ளஸ் வாயினால் மாத்திரமே அமைச்சருக்கான வேலையினை செய்கின்றார்

## வடக்கு,கிழக்கு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ள சாணக்கியன்

(நமது நிருபர்)

வடமாகணத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனினால் முன்னெடுக்கப் படும் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் பிரதேச ரீதியாக மேற்கொள்ளும் கவன ஈர்ப்பு போராட்டத்திற்கு

02 ஆம் பக்கத்தில்...



## சாணக்கியன் சாடல்!

(ருத்திரன்)

அமைச்சர் டக்ளஸ் வாயினால் மாத்திரமே அமைச் சருக்கான வேலையினை செய்கின்றார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

தனது பண்முகப்படுத்தப்பட்ட நிதி ஊடாக வாழைச் சேனையில் வாழ்வாதார

02 ஆம் பக்கத்தில்...



## நிதி மோசடி வழக்கிலிருந்து விடுதலையானார் பசில்

(காந்தன்)

திவிநெகும நிதி மோசடி வழக்கில் இருந்து அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் முன்னாள் திவிநெகும பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.



கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று குறித்த உத்தரவினை பிறப்பித்துள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, உள்ளூர் அதிகாரிகளுக்கு எஐ குழாய் வழங்குவதாக 36 மில்லியன் அரச நிதிகளை மோசடி செய்தததாக பசில் மற்றும் கித்சிறிக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே இருவரையும் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



## இலங்கை அரசுடனான உறவை இந்தியா கைவிடவேண்டும்

### ராமதாஸ் கோரிக்கை

போர்க்குற்றங்களையும், இனப் படுகொலைகளையும் நிகழ்த்திய சிங்களப் படையினருடனான ஒத்துழைப்பை அதிகரிப்பதையும், அந்த நாட்டுப் படையினருக்கு பயிற்சி அளிப்பதையும் இந்திய அரசு கைவிட வேண்டும் என்று பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையுடனான ராணுவ ஒத்துழைப்பை விரிவுபடுத்த இந்தியா முடிவு செய்திருப்பதாகவும், சிங்கள ராணுவத்தினருக்கு அதிக எண்ணிக்கையில் பயிற்சியளிக்கத் தீர்மானிக்கப்பட்டு

02 ஆம் பக்கத்தில்...

## கரன்னாகோடவுக்கு நீதிமன்றம் அழைப்பு



(காந்தன்)

சட்டமா அதிபர் மற்றும் வசந்த கரன்னாகொடவை எதிர்வரும் 29 ஆ ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக அறிவித்தல் பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவிற்கு எதிராக விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையை வாபஸ் பெறுவதற்கு சட்டமா அதிபர் எடுத்துள்ள நடவடிக்கையை சவாலுக்கு உட்படுத்தி, கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்களின் உறவினர்கள்

02 ஆம் பக்கத்தில்...

## எமது உரிமையினை வேல்வதற்கு பாரத தேசம் எமக்கு துணை நிற்க வேண்டும்

### யாழ் மாநகர முதல்வர்



(யாழ்.கீதன்)

எமது உரிமையினை வெல்வதற்கு பாரத தேசம் எமக்கு துணை நிற்க வேண்டும் என யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணன் கோரிக்கை வைத்துள்ளார்.

யாழ் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ் பொது சன நூலகத்தில் இன்று இடம் பெற்ற அப்துல் கலாமின் 90 ஆவது பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வி.மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது உரிமை கோரிக்கையை வெல்வதற்கு பாரத தேசம் எமக்கு துணை நிற்க வேண்டும்.எமது தந்தை நாடு என்ற அடிப்படையில் நமக்கு துணை நிற்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் விடுகின்றேன். ஒருபோதும் பாரத தேசத்தினுடைய நலன்களுக்கு முரணாக நாங்கள் செயற்படப்

02 ஆம் பக்கத்தில்...

## மீண்டும் முதலமைச்சராக களமிறங்க தயார்

### விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்.கீதன்)

இம்முறையும் எங்கள் கட்சிகளின் தலைவர்கள் இணைந்து நீங்கள் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் எனக் கேட்டால் அது என்னுடைய கடமை என ஏற்று மீண்டும் களத்தில் குதிக்கத் தயாராக இருக்கின்றேன் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணத்தில் வைத்து மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

02 ஆம் பக்கத்தில்...

## தேர்தல் முறையில் மாற்றம்; மலையக மக்களையே பாதிக்கும்

(ஜீவா)



மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற விடயத்தில் கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என தெளிவான முடிவில் இ.தொ.கா உள்ளதென்றும் மாகாண சபைத் தேர்தல் நடத்த தாமதமானால், உள்ளூராட்சி தேர்தலும் நடத்தப்படமுடியாது என

02 ஆம் பக்கத்தில்...












## பயணத்தடை மேலும் நீடிப்பு

மாகாணங்களுக்கு இடையில் அமுலில் இருக்கும் பயணத்தடை எதிர்வரும் 21ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் இருக்கும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை, இம்மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை வரை கடுமையாகக் கடைபிடிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இம்மாதம் 19 மற்றும் 20 ஆம் திகதிகள் விடுமுறை தினங்களாக அமையப் பெற்று நீண்ட விடுமுறையுடன் கூடிய வார இறுதி அமையப்பெறவுள்ளமையால், அனைத்து மாகாண எல்லைகளிலும்

02 ஆம் பக்கத்தில்...



வருடாந்த நவராத்திரி விழாவினை முன்னிட்ட விஜயதசமி விழா காரைதீவு பிரதேசசபை தவிசாளர் கி.ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற போது...
**படம். வி.ரி. சகாதேவராஜா**

## தேர்தல் முறையில் மாற்றம்;

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பான சீர்திருத்த குழுவில் தானும் ஒரு அங்கத்தவன் என தெரிவித்த அவர், அதில் அனைத்து மலையக கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுகிறோம்.தேர்தல் முறையில் மாற்றம் வந்தால் அது கட்டாயமாக மலையக மக்களாகிய இந்திய வம்சாவளி மக்களை மாத்திரமே பாதிக்கும். அதற்கு இடமளிக்க முடியாது. அவ்வாறு நடந்தால் ஜனநாயகம் செயலிழந்து போய்விடும் என்றார்.

நேற்று இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர் அஸ்கிரிய பீடத்தின் மஹாநாயக்க தேர்ரை சந்தித்த பின்னர், ஊடகங்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேப்போல் அசேதன பசளையை நிறுத்துவது நல்ல விடயம் தான் .ஆனால் அதனை உடனடியாக நிறுத்தியதால் சில பாதிப்புகள் வரலாம் என தெரிவித்த அவர், உரப் பிரச்சினையால் தேயிலை உற்பத்தி 30 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே விவசாயிகள், தொழிலாளர்களை பாதுகாப்பதற்கான தீர்வு கிடைப்பது அவசியம் என்றார்.

## பயணத்தடை மேலும் நீடிப்பு

போக்குவரத்து நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , பாதுகாப்புத் துறையினருக்குப் பணிப்புரை விடுத்தார்.

வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று முற்பகல், இடம்பெற்ற கொவிட் ஒழிப்பு ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தின் போதே, ஜனாதிபதி மேற்கண்ட பணிப்புரையை விடுத்தார்.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களான 18 - 19 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கைகள், இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று, சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அத்துடன், ஏனைய மாவட்டங்களிலுள்ள மேற்படி வயதுப் பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பிள்ளைகளுக்கும், இம்மாதம் 21ஆம் திகதி முதல், பாடசாலைகள் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாகத் தடுப்பூசி ஏற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளுக்கு அமைவாக, பாடசாலை மாணவர்களுக்கு ஒரு டோஸ் தடுப்பூசியும் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு இரண்டு டோஸ் தடுப்பூசிகளும் செலுத்தப்படவுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசிகள் செலுத்தப்பட்ட பின்னர், சுகாதாரப் பரிந்துரைகளுக்கமைய, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கான மூன்றாவது டோஸ் தடுப்பூச்சியைச் செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமையன்று, மேலும் 6 இலட்சம் ஃபைசர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன என்றும் கோரப்பட்டிருந்த தடுப்பூசிகள் தொடர்ந்த கிடைத்துக்கொண்டு இருக்கின்றன என்றும், கொவிட் தடுப்புச் செயலணியின் உறுப்பினரும் விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

கொவிட் தொற்றுக்கு இலக்காகி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையை மேலும் குறைத்துக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட வேண்டுமென்றும் தொற்றுக்கு இலக்காகும் நோயாளிகள் தற்போது கண்டறியப்படும் பிரதேசங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி, அவ்விடங்களைத் தனிமைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

கொவிட் ஒழிப்புக்காக சுகாதாரத் தரப்பினர் பின்பற்றிய வீட்டுத் தனிமைப்படுத்தல் வேலைத்திட்டமானது, உலக சுகாதார ஸ்தாபனத்தின் விசேட பாராட்டைப் பெற்றுள்ளது என, விசேட வைத்திய நிபுணர் அநுருத்த பாதெனிய கொவிட் ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின் போது அறிவித்தார்.

## கரன்னாகொடவுக்கு நீதிமன்றம் அழைப்பு

நால்வரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்தாணை மனு இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2008, 2009 ஆம் ஆண்டுகளில் கொழும்பில் வெள்ளை வேன்களை பயன்படுத்தி 11 இளைஞர்களை கடத்தி காணாமல் ஆக்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் 14 ஆவது பிரதிவாதியான முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை தொடர்ந்தும் முன்னகர்த்தப் போவதில்லையென சட்ட மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு சமீபத்தில் அறிவித்தார்.

சட்ட மா அதிபரின் குறித்த தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள குறித்த மனுவை எதிர்வரும் 29 ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது.

இதற்கிணங்க, வழக்கின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட மா அதிபர் மற்றும் வசந்த கரன்னாகொடவை எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்தல் பிறப்பிக்குமாறு மனுதாரர் தரப்பிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## மீண்டும் முதலமைச்சராக களமிறங்க தயார்

‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக எந்தவித பேச்சும் நடைபெறவில்லை. எல்லாக் கட்சிகளும் இணைந்து சில விடயங்களை அரசுடன் பேச முடியுமா என்பது தொடர்பாகவே ஆராயப்பட்டு வருகின்றது. அதில் மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமான பேச்சுக்கள் இதுவரை நடைபெறவில்லை.

என்னைப் பொறுத்த வரையிலே மாகாண சபைத் தேர்தலை அரசு தற்போதைக்கு நடத்தாது என்பதே என்னுடைய கருத்து. அரசிடம் பணமில்லை. கருத்துக் கணிப்பு மூலமாக அரசு தனக்குள்ள ஆதரவு குறைந்ததை உணர்ந்துள்ளது. ஆகவே, மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் பிரச்சினை ஆகிவிடும் என்கின்ற அடிப்படையில் அவர்கள் தேர்தலைத் தள்ளி வைக்கவே விரும்புவார்கள். அரசுக்கு மாகாண சபையைத் தொடர்ந்தும் வைத்திருக்கக் கூடாது என்ற எண்ணமே இருக்கின்றது.

புதிய அரசமைப்பின் மூலம் மாகாண சபை முறைமையை நீக்கி முற்றிலும் சிங்கள பௌத்த அரசமைப்பைக் கொண்டு வருவார்களோ என்பது எனது சந்தேகம். தற்போது மாகாண சபைத் தேர்தலை நடத்துவது அரசுக்கு நன்மையைத் தராது; தீமையையே தரும் என்ற அடிப்படையிலே மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது என்பதே என்னுடைய கருத்து’ என்றார்.

‘மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் நீங்கள் முதலமைச்சர் வேட்பாளராகக் களம் இறங்குவீர்களா?’ எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கும்போது, ’என்னை அரசியலுக்குள் கொண்டு வருவதற்கு கட்சிகளின் தலைவர்கள் பலர் சேர்ந்து எத்தனையோ முறை அழைத்ததன் பேரில் தான் இறுதியாக உடன்பட்டேன். இப்போதும் எங்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இணைந்து நீங்கள் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் எனக் கேட்டால் அது என்னுடைய கடமை என ஏற்று மீண்டும் களத்தில் குதிக்கத் தயாராக இருக்கின்றேன்’ என்றும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை அரசுடனான உறவை இந்தியா

உள்ளதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் மிகவும் அதிர்ச்சியளிக்கின்றன.

இனப் படுகொலை குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள இலங்கை ராணுவத்திற்குப் பயிற்சிகளையும், உதவிகளையும் அளிப்பது ஈழத் தமிழர்களுக்குச் செய்யப்படும் துரோகமாகும்.

இலங்கைக்கு நான்கு நாட்கள் அரசு முறைப் பயணமாகச் சென்றுள்ள இந்திய ராணுவத் தளபதி மனோஜ் முகுந்த் நரவணே, அந்நாட்டின் அதிபர் கோட்டாபய ராஜபக்ச ), பிரதமர் மகிந்த ராஜபக்ச , ராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா உள்ளிட்டோரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.இந்தச் சந்திப்புகளின்போது இந்தியா இலங்கை இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டதாகவும், அதன் ஒரு கட்டமாக, இந்தியாவில் ஆண்டுக்கு 1000 சிங்கள வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பது மட்டுமின்றி, கூடுதலாக 50 ராணுவ அதிகாரிகளுக்குச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பயிற்சியை அளிக்கத் தீர்மானிக்கப்பட்டதாகவும் இலங்கை அரசு தெரிவித்திருக்கிறது. இது ஈழத் தமிழர்களின் நலன்களுக்கு எதிரானதாகவே அமையும்.

உலக மயமாக்கல் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சூழலில், உலகிலுள்ள அனைத்து நாடுகளும் ஒன்றை ஒன்று சார்ந்துதான் செயல்பட்டாக வேண்டும்.

ஒவ்வொரு நாடும் அண்டை நாடுகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டியது அவசியம் ஆகும். ஆனால், ஒரு நாடு அதற்கு வழங்கப்பட்ட உதவியைத் தவறாகப் பயன்படுத்தும் என்று தெரிந்தால், அந்த நாட்டுக்கு உதவாமல் இருப்பதுதான் அறம். அவ்வாறு ராணுவரீதியாக உதவக்கூடாத நாடுகள் பட்டியலில் மிகவும் முக்கியமானது இலங்கை ஆகும்.

இலங்கைக்கு மருத்துவ ரீதியாகவும், மனிதநேய அடிப்படையிலும் உதவிகளைச் செய்வதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், இலங்கையில் 2009ஆம் ஆண்டு நடந்த இறுதிப் போரில் ஒன்றரை லட்சம் அப்பாவித் தமிழர்களைக் கொடூரமாகப் படுகொலை செய்த சிங்களப் படையினருக்கு உதவிகள் அளிக்கப்பட்டால், அது மீண்டும், மீண்டும் ஈழத் தமிழர்களைக் கொல்லவும், ஒடுக்கவும் மட்டும்தான் பயன்படும்.

இலங்கையில் அடிப்படை மனிதநேயம் கூட இல்லாத சிங்களப் படைகள் அப்பாவித் தமிழர்களை இனப்படுகொலை செய்தன. சிங்களப் படையினர் போர்க்குற்றங்களை இழைத்தது உண்மை என்பதை விசாரணை மூலம் உறுதி செய்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம், அந்தக் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கான ஆதாரங்களை இப்போது திரட்டி வருகிறது.

இதுவரை 1.20 லட்சத்துக்கும் கூடுதலான ஆதாரங்களை ஐ.நா. மனித உரிமை ஆணையம் திரட்டியிருக்கிறது. இலங்கைப் போர் முடிவடைந்து 12 ஆண்டுகள் ஆகியும் அங்கு மனித உரிமை மீறல் தொடருவதாகவும், போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மன்னிக்கப்படுவதாகவும் ஐ.நா. மனித உரிமை ஆணையம் குற்றம் சாட்டியிருக்கிறது.

இன்றளவிலும் இலங்கையில் தமிழர்கள் ஒடுக்கப்படுகிறார்கள்; தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் நீடிக்கின்றன. ஈழத் தமிழர்களுக்கு எதிராக போர்க்குற்றங்களையும், இனப்படுகொலைகளையும் நிகழ்த்தியவர்களின் கைகளில்தான் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பு உள்ளது.

இலங்கை இறுதிப் போரின்போது அதிபராக இருந்த மகிந்த ராஜபக்சதான் இப்போது பிரதமர்; அப்போது பாதுகாப்புத் துறைச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்சதான் இப்போது அதிபர்; இலங்கை இறுதிப் போரில் 58ஆவது படையணியின் தளபதியாக இருந்து அப்பாவி ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த ஷவேந்திர சில்வாதான் இப்போது இலங்கையின் போர்ப்படைத் தளபதியாக இருக்கிறார்.

அவர் செய்த கொடிய குற்றங்களுக்காக அமெரிக்காவில் நுழைய அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது. இத்தகைய பின்னணி கொண்டவர்களால் இயக்கப்படும் இலங்கை ராணுவத்துக்குப் பயிற்சியும், உதவிகளும் வழங்கும்போது அவை ஆக்கப்பூர்வமாக மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் பார்த்தால் இந்தியா வழங்கும் ராணுவ உதவிகள் ஈழத் தமிழர்களுக்கு எதிராகத்தான் பயன்படுத்தப்படும் என்ற அச்சம் உலகம் முழுவதும் வாழும் தமிழர்களிடம் நிலவுகிறது என்பதை மத்திய அரசு உணர வேண்டும்.

எனவே, போர்க்குற்றங்களையும், இனப்படுகொலைகளையும் நிகழ்த்திய சிங்களப் படையினருடனான ஒத்துழைப்பை அதிகரிப்பதையும், அந்த நாட்டுப் படையினருக்கு பயிற்சி அளிப்பதையும் இந்திய அரசு கைவிட வேண்டும்.

மாறாக, இலங்கையில் போர்க் குற்றங்களைப் புரிந்தவர்களுக்கு தண்டனை வாங்கித் தருவதற்கான ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் முயற்சிகளுக்குத் துணை நிற்க வேண்டும் என இலங்கை அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும் அதன்மூலம் ஈழத் தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தரவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## எமது உரிமையினை வெல்வதற்கு பாரத தேசம் எமக்கு

போவதில்லை.நாங்கள் பாரத தேசத்தினுடைய உறவுகளாக தொப்புள் கொடி உறவுகளாக அவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காக அவர்களுடைய பொருளாதாரத்தை அவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தகூடிய ஒரு தரப்பாக நாங்கள் இந்த தேசத்தில் இருப்போம்.

தென்னிந்தியா என்பது எமது தொப்புள் கொடி உறவுகள் வாழ்கின்ற இடமாகும்.ஆகவே பண்பாட்டு ரீதியாகவும் பாரத தேசத்தை நாங்கள் பின்பற்றுகிறோம்.

எங்களுடைய அரசியல் கலாச்சாரத்திலும் பாரத தேசத்தினுடைய அரசியல் கலாச்சாரத்தை பின்பற்றுகின்றோம்.

பாரத தேசத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தினை பின்பற்றுகின்றவர்களை அங்கே நினைவு கூருவதை போல இங்கேயும் நினைவுகூரும் பண்பாட்டை பின்பற்றி வருகின்றோம். குறிப்பாக இன்றைய விஜயதசமி நாளில் அப்துல் கலாமினுடைய நினைவு தினத்தில் பாரத தேசத்திற்கு ஒரு கோரிக்கையையினை முன்வைக்க விரும்புகின்றேன்.

எமது நீண்டகால உரிமை கோரிக்கையினை பாரத தேசம் செவிசாய்க்க வேண்டும். நாம் தென்னிலங்கையில் இருக்கின்ற சிங்கள மக்களுக்கும் எதிரானவர்களல்ல. நாங்கள் மற்றய இனத்தை அழிப்பதற்காக எமது உரிமையினை கோரவில்லை. நாங்கள் எம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக எம்மை வளர்த்துக் கொள்ள எமக்கு உரிமை வேண்டும் என கடந்த 60 வருடங்களாக போராடி வருகின்றோம்.

அந்த வகையில் பாரத தேசம் எமது கோரிக்கையினை நியாயமாக புரிந்து எமது கோரிக்கைகளை அடைவதற்குத் தன்னுடைய முயற்சி, அழுத்தங்களையும் அதனுடைய ஒத்துழைப்புகளையும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

பாரத தேசம் தரும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றோம் ஏற்கனவே 13வது திருத்தச் சட்டத்தினை பெற்றுத்தந்தது.இந்த பாரத தேசமே.அந்த நன்றிக் கடன் எமக்குள்ளது என்று மணிவண்ணன் தெரிவித்தார்.

## வடக்கு,கிழக்கு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ள

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முழு ஆதரவுடன் மட்டக்களப்பிலும் எதிர்வரும் 18 ஆம் திகதி நடத்தப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இந்த கவனஈர்ப்பு போராட்டமானது இரு தரை மற்றும் கடல் வழி என நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எமது மக்களின் மிக முக்கிய வாழ்வாதாரங்களை காப்பாற்றும் போராட்டங்களிற்கு அனைவரையும் அணிதிரளுமாறு அழைக்கின்றோம் என இரா சாணக்கியன் அழைப்பு விடுத்துள்ளார்.

## அமைச்சர் டக்ளஸ் வாயினால் மாத்திரமே

உதவிகளை வழங்கியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், தமிழக மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகள் காரணமாக வட பகுதி மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். வட பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் முழுமையாக அழிவடைந்து வருகின்றது.

இதற்குரிய காரணம் எங்களது மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாயினால் மாத்திரமே அமைச்சருக்கான வேலையினை செய்கின்றார். அவருடைய வேலையினை அவர் பார்ப்பது இல்லை.

கடந்த ஒரு வருடமாக நான் அவரிடம் முன்வைத்த எந்த கோரிக்கையினையும் அவர் நிறைவேற்றவில்லை. நாடாளுமன்றத்தில் அதை செய்கின்றேன். இதை செய்கிறேன் என தெரிவிப்பார். ஆனால் இது வரை இந்திய மீனவர்களை தடுக்க முடியாத நிலையில் உள்ளார்.


உண்மையிலேயே இந்த அரசாங்கம் புத்திசாலித்தனமான அரசாங்கம். தமிழர் ஒருவரினை மீன்பிடி அமைச்சராக நியமித்து, தமிழகத்தில் உள்ள தமிழர்களையும் இலங்கையிலுள்ள தமிழர்களையும் மோதவிட்டு சிரித்து கொண்டு இருகின்றது. இதனை அமைச்சர் முதலில் உணர வேண்டும்.

அப்படி செய்ய முடியாவிட்டால் பதவியினை இராஜினாமா செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.






# துய்யோனின் 'பிராயச்சித்தம்'






'துய்யோன்' எனும் புனைபெயருடன் எழுதி வரும் கிழக்கின் புகழ்பூத்த அதிபர் எழுத்தாளர் எ.எச்.எ.பஷீரின் நான்காவது நூல் 'பிராயச்சித்தம்' எனும் சிறுகதைத்தொகுப்பாகும்.

சாய்ந்தமருதைச்சேர்ந்த அதிபர்திலகம் கலாபூசணம் ஜனாப் பஷீர் கல்முனை மகுமூத் மகளிர் கல்லூரியில் 26ஆண்டுகாலம் அதிபராகவிருந்தவர். பாளிகாவின் பொற்காலம் என வர்ணிக்கப்படுவதற்கு ஆணிவேராகத்திகழ்ந்தவர் பஷீர்.

அதிபராகவிருந்த பஷீர் கனதியான எழுத்தாளராக இருப்பது பலருக்குத் தெரியாது. அவர் விளம்பரத்தைவிரும்பாத அமைதியான சுபாவம் கொண்டவர்.

அவர் 'இதயதாகம்' எனும் நாவலையும் 'அவள்செத்துக்கொண்டுவாழ்கிறாள்'எனும் சிறுகதைத்தொகுதியையும் 'ஒரு பூ மீண்டும் மலர்கிறது' எனும் நவீனத்தையும் எழுத்துலகிற்குப்படைத்த பஷீர் தற்போது நான்காவது படைப்பாக பிராயச்சித்தத்தை வெளியிட்டிருக்கிறார்.

இந்நூலை அவர் சமர்ப்பணம்செய்திருப்பது கிழக்கின் புகழ்பூத்த கவிஞர் சண்முகம் சிவலிங்கம் அவர்களுக்கு. தனது மதிப்பிற்குரிய ஆசானான சண்முகம் சிவலிங்கத்திற்கு இந்நூலை சமர்ப்பணம் செய்திருப்பதிலிருந்து அவரது குருபக்தி வெள்ளிடைமலையாகத் தெரிகிறது.

%சிறுகதைகளைக்கொண்டு %5பக்கங்களில் இத்தொகுப்பு வெளிவந்திருக்கிறது. பெரும்பாலானவை கல்விப்புலம் சார்ந்து காணப்படுகிறன்றன.இவைஅனைத்தும் வீரகேசரி தினகரன் மித்திரன் தமிழ்மிறர் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தவை.

ஆசிரியர்பணி கல்விஅதிகாரி பாடசாலைக்கு வருகிறார் தண்டனைகள் தீர்வாவதில்லை பழி பிராயச்சித்தம் ஆதங்கம் நிறைவு ஆகிய ஏழு சிறுகதைகள் இந்;நூலை அலங்கரிக்கின்றன. இவற்றில் ஆசிரியப்பணி பிராயச்சித்தம் கல்விஅதிகாரி பாடசாலைக்குவருகிறார் ஆகிய கல்விப்புலத்திலான கதைகள் எனக்கும் நிறையபிடித்திருந்தது.

'எழுத்துக்கு இறக்கைவைத்துப் பறத்தல்..' எனும் மகுடத்தில் தீரன் ஆர்.எம்.நௌசாட் ஆழமானதொரு அணிந்துரையை வழங்கியிருக்கிறார். அதுவொன்றே போதுமானது. அத்துணை சிறப்பாக பிராயச்சித்தத்தை துலக்கியிருக்கிறது.

அணிந்துரையில் 'துய்யோனின் எழுத்துக்களில் மகா ஆடம்பரங்கள் இல்லை.அதிக இழிந்த மொழிகளும் இல்லை. முடிந்தவரை ஒப்பனைகள் நீக்கிய மிகையுணர்ச்சி தவிர்த்த படிமங்கள் அற்ற எழுத்து துய்யோனுடையது.

ஒருபுழுவுக்கு சிங்காரமான இறக்கைகள் வைத்துப்பார்ப்பதில் அவர் சமரசம் கொள்ளவில்லை என்பது புரிகிறது. மற்றது அவர் தன் கதைகளைத்தேடி விண்வெளிக்குச்செல்லவில்லை. தன்னைச்சுற்றியுள்ள மேய்ச்சல் வெளியில் வேண்டியளவு மேய்ந்துவிட்டு ஆறுதலாக உட்கார்ந்து அசைபோட்டிருக்கிறார். அதற்காக இக் கதை சொல்லியடி நாம் எவ்வளவும் பாராட்டலாம்.

அவரது கல்வியியல் நெறி அவரது எழுத்துக்களில் வியாபகமாகச் சூழ்ந்துகொண்டுள்ளதை இக் கதைகளின் ஊடே நம்மால் தரிசிக்கமுடிகிறது.' என்று தீரன் அழகாகக்கூறியிருக்கிறார்.

எழுத்தாளர் பஷீர் இன்னும் நிறைய எழுத வேண்டுமென்பது எழுத்துலகின் அவா.

விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா

# ஏழுவகைநுண்கலை வித்தியாரத்துடன் நிறைவுபெற்ற கிழக்கு நவராத்திரிவிழா







( வி.ரி.சகாதேவராஜா)



இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் கிழக்கு மாகாணத்திற்கான நவராத்திரிவிழா நேற்று நடனம் பண்ணிசை உள்ளிட்ட ஏழு வகையான வித்தியாரம்பம் கும்பம்சொரிதலுடன் நிறைவு பெற்றது.

இந்துசமய கலாசாரத் திணைக்களம் காரைதீவு பிரதேசசெயலகம் மற்றும் காரைதீவு விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து வரலாற்றில் முதற்தடவையாக இத்தகைய நவராத்திரிவிழாவை ஒழுங்குசெய்திருந்தது.

இந்துசமய கலாசாரத்திணைக்கள பணிப்பாளர் அருளாநந்தம் உமாமகேஸ்வரனின் வழிகாட்டலில் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜியின் ஒழுங்கமைப்பில், இவ்விழா சுகாதாரநடைமுறைவிதிக்கமைய ஏற்பாடுசெய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்றது.

விஜயதசமிநாள் விழா காரைதீவு பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் நடைபெற்றது. விசேடஅதிதிகளாக தவிசாளர் கி.ஜெயசிறில் நடனத்துறை முனவர் திருமதி நிசாந்தராகினி திருக்குமரன் சுவாமி விபுலாநந்த பணிமன்றமுன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா அறங்காவலர் ஒன்றியதலைவர் இரா.குணசிங்கம் செயலாளர் சி.நந்தேஸ்வரன் ; உள்ளிட்டோர்; கலந்துசிறப்பித்தார்.இவ்விழாவில் அறநெறி மாணவரின் பேச்சு நடனமும் இடம்பெற்றது. விசேட பூஜை பஜனை வழிபாடும் வித்தியாரம்பமும் இடம்பெற்றது.

நடனம், பண்ணிசை ,மிருதங்கம் ,கதாப்பிரசங்கம், யோகாசனம் போன்ற ஏழு வகையான கலைகளின் வித்தியாரம்பம் இடம்பெற்றமை விசேடஅம்சமாகும்.

திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் மெய்நிகர் அலையில் உரையாற்றினார்.

இந்துகலாசாரஅமைச்சின் காரைதீவு சுவாமிவிபுலாநந்தர் கற்கைகள் நிறுவக நடனவளவாளர் ஜெயகோபன்தாட்சாளினி பொன்னாடைபோர்த்துக்கௌரவிக்கப்பட்டார். மாணவியரின் நடனம் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நடனம் பேச்சு நடைபெற்றது.

மாவட்ட இந்துசமயகலாசார உத்தியோகத்தர் கே.பிரதாப், பிரதேசஇந்துசமய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ்.சிவலோஜினி நிகழ்ச்சிகளை தொகுத்து நெறிப்படுத்தினார்.

இவ்விழா ஒன்பது நாட்களும் பல்வேறு கலைநிகழ்வு சொற்பொழிவுடன் இடம்பெற்று நேற்று(15)வெள்ளி விஜயதசமியன்று ஏடுதொடக்கல் வித்தியாரம்பத்துடன் நிறைவடைந்தது என பணிமன்ற செயலாளர் கு.ஜெயராஜி தெரிவித்தார்.



MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Franzósisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com




supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65



Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

## அஹிம்சை வழியிலான போராட்டத்தில்:





# தந்தை செல்வாவும், தலைவர் அஷ்ரபும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்

மறைந்த பெரும் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரபின் 21ஆவது நினைவேந்தல் நிகழ்வு இணையவழியூடாக (நூணிணிட்) , அவரது நினைவு தினத்தன்று(16.9.2021), முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டில் அதன் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் தலைமையில், இடம்பெற்றபோது, எழுத்தாளரும் கவிஞரும் சென்னையில் வசிக்கும் குணசித்திர நடிகருமான வ.ஐ.ச.ஜெயபாலன், மர்ஹூம் அஷ்ரபைப் பற்றி பகிர்ந்து கொண்ட நினைவலைகள்.

என்னுடைய தோழரும் , முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், எனது பல்கலைக்கழக தோழன் மன்சூர் ஏ காதிர், எனது நீண்ட கால நண்பர் பௌஸர் போன்ற பலர் இன்றைய நிகழ்வில் கலந்து கொண்டிருக்கிறீர்கள்.எல்லோருக்கும் எனது வாழ்த்துகள்.

மறைந்த அஷ்ரபை தந்தை செல்வநாயகத்தை விட்டுவிட்டு தனியே நினைவு கூருவது சாத்தியமில்லை. மறைந்த செல்வநாயகமும் அஷ்ரபும் இன விடுதலையின் ஆன்மீக முகங்களாகத் திகழ்ந்தவர்கள். கிறிஸ்தவரான செல்வநாயகத்தை பொதுவாகத் தமிழர்கள் தலைவராக ஏற்றுக் கொண்டனர்.அந்த நாட்களில், அல்லது %0களுக்கு முன்னர் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் பக்தி மார்க்கம் மேலோங்கி இருந்தது. பக்தி மார்க்கம் மேலோங்கிய இருந்த அந்தக் காலகட்டம் மிக முக்கியமானது. சிறந்த பேச்சாளரான சி அஷ்ரப், தன்னுடைய வழிகாட்டிகளில் தந்தை செல்வாவும் ஒருவர் என என்னிடம் கூறி இருக்கிறார்.அஹிம்சை வழியில் இலக்கை நோக்கிப் பயணிப்பதில் தந்தை செல்வாவும்,தலைவர் அஷ்ரபும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்.

முஸ்லிம் மக்கள் மத்தியில் %0 களுக்கு முன்னர் மேலோங்கி இருந்த சூபித்துவம் என்றறியப்பட்ட பக்தி மார்க்கத்துடைய மகிமைதான் முக்கியம். பக்தி மார்க்கத்தை தமிழ்,முஸ்லிம் தரப்புக்கள் இரண்டும் இழந்த காலப்பகுதிதான் துயரம் நிறைந்த கால கட்டங்களாக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இச் சந்தர்ப்பத்தில் அஷ்ரபுடைய கவிதைகள் மிகவும் முக்கியமானவை என்பதை ஏ.எல். தவம் ஆற்றிய உரையைக் கேட்ட போது உணர்ந்தேன்.

அஷ்ரபுடைய அரசியல் தொடர்பான தேடலில் எங்கள் இருவருக்குமிடையே இருந்த தொடர்பாடல் குறிப்பிடத்தக்கது. நாங்கள் அடிக்கடி சந்தித்ததில்லை. ஆனால், எங்களுடைய முக்கியமான இரண்டு சந்திப்புகள் ஒரே மாதிரியானவையாக இருந்தன. ஒரு சந்தர்ப்பத்தில் நாங்கள் கண்ட கனவுகளையும் அதை நனவாக்கக் கூடிய ஆய்வுகளையும் பற்றி ஓர் இரவு முழுக்கப் பேசினோம். இறுதியாகச் சந்தித்தபோதும் இரவிரவாகவும்,பகலிலும் பேசினோம்.


அவருடனான முக்கிய சந்திப்பு, அம்பாறை கலவரத்தில் தப்பியோடி வந்த நகரச்சுத்தி தொழிலாளர்களை பாதுகாக்கும் பணியில் நான் கல்முனையில் இருந்த போது நிகழ்ந்தது.அம்பாறை செல்லும் வழியில் அவர்களை பலாத்காரமாகக் கொண்டு செல்ல இராணுவம் முயன்ற போது என்னுடைய உடலின் மீதுதான் நீங்கள் அவர்களைக் கொண்டு செல்ல முடியும் என்று நான் அவர்களோடு மோதினேன். அதனால் பகலில் முகாமிலும் இரவில் உயிர் அச்சத்தோடும் இருக்கும் சூழலில் ஒரு நாள் எனக்குப் பாதுகாப்பாக திடீரென்று அஷ்ரப் வந்து தன்னுடைய வீட்டுக்கு வருமாறு என்னை அழைத்துச் சென்றார்.

அப்போது எனது கையில் ‘தேசிய இனப்பிரச்சினையும் முஸ்லிம் மக்களும்’ எழுத்துப் பிரதி இருந்தது. அவர் திருமணமான புதிது. மனைவியோடு வந்திருந்தார். அப்படி இருந்தும் கூட, அன்றிரவு முழுக்கவும் பேசிக் கொண்டிருந்தோம். என்னுடைய எழுத்துப் பிரதியை அவர் வாசித்தார். பிறகு நாங்கள் நிறைய ஆய்வு செய்து கடந்த கால, எதிர்கால சம்பந்தப்பட்ட விடயங்களைப் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுதேயே தமிழ் இளைஞர்கள் மத்தியிலிருந்து பாரம்பரியமான ஆன்மீக விழுமியங்கள் இழக்கப்பட்டுக் கொண்டிருந்தன. முஸ்லிம் இளைஞர்கள் மத்தியிலும் அத்தகையதொரு போக்கு ஆரம்பமான காலம். இவற்றைத் தாண்டி தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒற்றுமைப்படுத்தி, அரசியல் செய்வது பற்றிய கனவுகளோடு நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். நண்பர் பௌஸர் பற்றியும் என்னிடம் அவர் கூறி இருக்கிறார். அந்தச் சந்திப்பில் நாங்கள் பேசிய விடயங்கள் அலாதியானவை.

கடைசிச் சந்திப்பு அவரது இறுதி நாட்களுக்கு சில மாதங்களுக்கு முன்னர். 2000 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் ஒரு குறுகிய பயணத்தில் கொழும்பு வந்திருந்தபோது நிகழ்ந்தது.அடுத்த நாள்; பின்னேரம் நான் நோர்வே செல்ல வேண்டியிருந்தது. அவர் அழைத்ததற்கிணங்க,நான் அவரைச் சென்று சந்தித்தேன். பகலெல்லாம் பேசினோம். அவர் பிறகு என்னை விடவில்லை. அன்று மாலை அங்கிருந்த எல்லோரையும் போகச் சொல்லிவிட்டார். ‘‘நான் ஜெயபாலனோடு தனியாகப் பேசப் போகிறேன்’’எனக் கூறி விட்டார்.

நாங்கள் இரவு அமர்ந்திருந்து பேசினோம். அவரது மனைவி உணவு பரிமாறினார். விடியும் வரை பேசினோம். அந்த விடயங்கள் கூட முந்திய சந்திப்பில் பேசிய விடயங்கள் போன்று எதிர்கால, சமகால முஸ்லிம் அரசியல் பற்றியதாகும்.இறுதிச் சந்திப்பில் பேசிய விடயங்கள் , முஸ்லிம்களின் எதிர்கால முன்னெடுப்புகளை, அரசியல், சமூக, பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்புதல் தொடர்பான உபாயங்கள் பற்றியதாகும். விடிய 5 மணிக்கு என்னை காரில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பினார். திரும்ப 6 மணிக்கு திரும்ப வரச் சொல்லி கார் அனுப்பியிருந்தார் . அப்போது அதை மறுக்க முடியாது நான் திரும்ப போனேன். அவர் சொன்னார் ‘ஜெயபாலன் உங்களுக்கு எயார்போர்ட் போவதற்கு ஒரு கார் தருகின்றேன். இன்னும் பேச வேண்டி இருக்கிறது. என்னுடன் கண்டிக்கு வாருங்கள்’ என்றார். என்னை கண்டிக்கு அழைத்துச் சென்றார். என்னுடைய ‘தேசிய இனப் பிரச்சினை முஸ்லிம் மக்கள்’ என்ற புத்தகத்தையும் எனது இன்னொரு புத்தகத்தையும் தன்னுடைய முகவுரையோடு வெளியிடப் போவதாகச் சொன்னார். அது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அன்று காலையில் கண்டிக்கு என்னை அழைத்துச் சென்றது தோழர் ரவூப் ஹக்கீமை அறிமுகப்படுத்துவதற்காகத்தான் என்று நினைக்கிறேன். அந்தச் சந்திப்பில் மாவனெல்லை என்ற இடத்தில் ஒரு வீட்டுக்குப் போய் உணவருந்தி விட்டு, ரவூப் ஹக்கீமை அறிமுகப்படுத்தி



யதுதான் அதில் முக்கியமானது. அதுதான் என்னுடைய கடைசிச் சந்திப்பு. இந்த இரண்டு முக்கிய சந்திப்புகளிலும் நாங்கள் பகிர்ந்து கொண்ட விடயங்கள் பற்றி சுருக்கமாகச் சொல்கிறேன்.

தந்தை செல்வா அஷ்ரப் இருவருடைய அரசியலிலும் பல நூற்றாண்டுகளாக தமிழர்கள், கிறிஸ்தவர்கள்,சைவர்கள்,முஸ்லிம்கள் ஆகியோரை ஐக்கியமாகப் பிணைத்;து வைத்திருந்த பக்தி மார்க்கம் பற்றிச் சிந்திக்க வேண்டும்.சைவர்கள் மத்தியில் இன்றிருப்பது மாதிரியான மதவாதப் போக்குகள் தலைதூக்குகின்ற தன்மை பெரிதாகக் காணப்படவில்லை. . ஆறுமுக நாவலர் போன்ற சிலருடையதை வாசிக்கும் போது அது கிறிஸ்துவத்திற்கு எதிராக இருந்தாலும், அது பெரிதாக இருக்கவில்லை. அதில் பக்தி மார்க்கம் இருந்தது. முஸ்லிம் மத்தியிலும் சூபித்துவம் பக்தி மார்க்கமாக மேலோங்கியிருந்தது.

இதுதான் வரலாறும் , ஒருமைப்பாடும் .நாங்கள் இன்றைக்கு நினைத்து ஏங்குகிற அந்தக் கால கட்டத்தின் மகிமை எனக் கூறலாம்.எங்களுக்கிடையிலான அந்த இரண்டு சந்திப்புகளிலும் அவர் தான் ஒரு சூபி என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். இதை ஒரு செய்தியாக இங்கு நான் உங்களிடம் குறிப்பிட வேண்டும்.

இரண்டு தரப்புகளிலும் விடுதலைக்கான போக்குகள் இருந்தன.தமிழர்களின் தோல்விக்குக் காரணம், வெறுமனே போராட்டம் சார்ந்ததல்ல. அவர்களுடைய உள்வாரியான விடயங்களில் வன்முறையைக் கையாண்டதுதான் .அதனால் வன்முறை ஒரு சித்தாந்தமாக மாறி விடுகிறது. உள்வாரியான விடயங்களை ஒன்றாக இருந்து பேசுவதை விடுத்து,அண்ணன் தம்பி கூட மனம் விட்டுப் பேச முடியாத ஒரு சூழலுக்கு நாங்கள் பழக்கப்பட்டுப் போனால், அதற்கான சூழலை உருவாக்கி விட்டால் வன்முறை ஒரு சித்தாந்தமாக மாறிவிடும்.

இவ்வாறாக7 0 களில் தமிழர்களின் மத்தியிலும் %0க்குப் பிறகு முஸ்லிம்கள் மத்தியிலும் உள்ளார்ந்த வன்முறைகள் கட்டுப்படுத்தப்படாததன் விளைவாக முக்கியமான பல சம்பவங்கள் நடந்தன. நீங்கள் அதிகமாகப் பேசுவதில்லை ; அதிகமாக உணர்வதில்லை. ஆனால், சர்வதேச சஞ்சிகைகளில் வந்த கட்டுரைகளை நீங்கள் இணையத்தில் எணிணிஞ்டுனு இல் தேடினீர்கள் என்றால், காத்தான்குடியைப் பற்றி நிறைய கட்டுரைகள் இருந்தன. சின்னச்சின்ன உரசல்கள் வந்த நேரத்தில் அத்தகைய வன்முறைகள் அமுக்கப்பட்டிருக்கும் என்றால் , இன்று முஸ்லிம் சமூகம் மிக உயர்ந்த நிலையில் இருந்திருக்கும். இதேபோன்றுதான் தமிழர்களுக்கும். தமிழர்களின் உள்ளார்ந்த வன்முறைகளும். தங்களுக்கு உள்ளே உள்ள பிரச்சினைகளை அடித்தடக்குவதற்கு ஒருவரும் தயாராக இருக்கவில்லை. எல்லோரும் வெறும் பார்வையாளர்களாக இருந்தமையும் தமிழர்களின் அழிவுக்கு ஒருவிதத்தில் காரணமாக இருந்தது. இந்த விடயத்தைப் பற்றி நாங்கள் பேசினோம். இந்த விடயத்தின் பின்னணி எப்படி வந்தது என்று பேசினோம்.

1970 களில் தமிழ்ப்பகுதிகள் உட்பட இலங்கை முழுவதிலும் பொருளாதாரத் தடை இருந்தது. அந்தத் தடையால் சிங்கள மக்கள் பெரிதாகப் பாதிக்கப்பட்டாலும், தமிழர்களைப் பொறுத்தவரையில் குறிப்பாக வடகிழக்கு தமிழர்களைப் பொறுத்தவரையில் பொருட்களின் விலையேற்றத்துடன் பல்வேறு விடயங்கள் நடந்தன.முஸ்லிம்களுடன் ஒப்பிடுகையில் தமிழர்களில் மத்திய தர வகுப்பினரின் வளர்ச்சி சற்று வேறுபட்டது. மிஷனரிகளுடைய காலங்களில் ஆரம்பித்தது.அந்த வளர்ச்சியின் தொடர்ச்சியாக 70 களில் ஏற்பட்ட பஞ்சங்களினால் மலையகத் தமிழர்களில் ஒரு சாரார் அநாதைகளாக வீதியில் அலைய நேர்ந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் மத்திய தர வர்க்கத்தினரின்



வளர்ச்சி இருந்தது.

கிழக்கிலும் உரப்பசளை பயன்பாடுகள் வந்ததினால் நெல் விளைச்சலில் நல்ல நிலை தோன்றியது.இந்த சூழலில் முஸ்லிம் மக்களுடைய மத்திய தர வளர்ச்சி ஏற்பட்ட போது தமிழர்களைப் போல் தொடர்ச்சி இருக்கவில்லை. முஸ்லிம்களில் பெரிய நில உடமையாளர்களும், ஓரளவு வர்த்தகர்களும் இருந்தனர்.கிழக்கில். தொடர்ச்சியாக முஸ்லிம்களைப் பற்றி பேசுகிற போது வடகிழக்கு முஸ்லிம்களைப் பற்றியும் தான் பேசுகிறோம். ஆனாலும் வடகிழக்கு முஸ்லிம்களின் அனுபவம் தென் இலங்கை முஸ்லிம்களுக்கும் மிகவும் முக்கியமானதாக இருக்கும். அங்கிருந்த பெரும்பான்மைச் சமூகத்தில் திடீரென்று அவர்களுக்கு மத்தியில் விழிப்புணர்ச்சியும் மத்திய தர வளர்ச்சியும் ஏற்படும் போது அது கொஞ்சம் உரசல்கள் உள்ளதாகத்தான் இருந்தது. எனக்குத் தெரிந்த வகையில் அஷ்ரபுடன் பேசிய விடயங்களைத்தான் சொல்கிறேன்.

அந்த நேரத்தில் அமைச்சர் கலாநிதி பதியுதீன் மஹ்மூதுடைய பங்களிப்பினால்,கல்வி வளர்ச்சி ஏற்பட்டது. அதிகமான முஸ்லிம் ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர். அதேபோன்று சவூதி அரேபியாவில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டது. சவூதி அரேபியாவிலிருந்து நிறைய தொழில் வாய்ப்புகள் வந்தன ; செல்வம் கொழித்தது. கூடவே அங்கிருந்து சில சித்தாந்தங்களும் இங்கு வந்து சேர்ந்தன.

எங்களது மத்தியதர வர்க்கத்தினர் வளர்ந்த பிறகு இன ஒடுக்குதல் சார்பான விடயம் மேம்பட்டிருந்ததால், செல்வநாயகத்தினுடைய கால அரசியலில் இருந்து போராட்டத்திற்கு நாங்கள் போய் இருந்தால் நிலைமை வேறு மாதிரி இருந்திருக்கும்.

கல்வி சார்பான இன ஒடுக்குதல் இருந்ததால், ஏற்கனவே நான் கூறிய மத்திய தரத்தினரின் வளர்ச்சி இருந்ததால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் 70 களிலேயே அவுஸ்திரேலியாவுக்கும் லண்டனுக்கும் வேறு நாடுகளுக்கும் சென்று படிக்கக்கூடியதாக இருந்தது. அவர்களின் காலத்திலேயே ஈரோஸ் போன்ற அமைப்புகள் உருவாகின.

இவ்வாறிருக்க,எங்களுடைய மரபு சார்ந்த தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவுகள் , உள்வாரியான பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கின்ற ஆன்மீக ரீதியான நல்லியல்புகள் போன்ற எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு, அவசர கதியில்தான் எங்களின் விடுதலை வேட்கை எழுந்தது.அத்தோடு,இரு பக்கத்திலும் சமகாலத்தில் வன்முறையை ஒரு சித்தாந்தமாக கருதும் போக்கு வளர்ந்தது. இதனுடைய விளைவாக 1985 அம்பாறைக் கலவரமாகவும் 1991 இல் வடபகுதியிலிருந்து முஸ்லிம் மக்களை பாதகமாக வெளியேற்றிய நிகழ்வாகவும் உச்சம் பெற்றது.

எனக்கு அஷ்ரபினுள் இருந்த ஆளுமை பற்றி நம்பிக்கையிருந்தது.1990 இல் வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு 5 ஆண்டு நினைவு நாளில் நான் ஒரு கவிதை வாசித்தேன்.அதில் நான் அறம் பாடியதாகக் கருதப்பட்டது. இத்தகைய ஒரு பண்பை என்னிடம் வளர்த்ததில் தலைவர்அஷ்ரபுக்கு பெரிய பங்கு உள்ளது.

1985 ஆம் ஆண்டு கலவரத்துக்குப் பிறகு அவர் விட்ட அறிக்கை என்னை மிகவும் கவர்ந்தது. அதில் அவர் ‘மருதமுனையைச் சார்ந்த இடங்களைத் தவிர மற்ற இடங்களில் தமிழர்களுடைய இடங்கள், கோயில்கள் எரிக்கப்பட்டு சாம்பலாக்கப்படுவதைப் பார்க்கிறேன். முஸ்லிம் என்று சொல்வதை வெட்கப்படுகிறேன்’ என்று அரசியலைத் துறந்து கொழும்பு செல்கிறார். உண்மையிலே என்னைப் பொறுத்தவரை,அவரது அந்தக் கூற்றின் தாக்கம் நான் இறக்கும் வரையும் இருக்கும். மறையும் வரை என்னை மனிதனாக வைத்திருக்கும்.

இறுதியாக நாங்கள் பேசியதில், முஸ்லிம்களுடைய எதிர்காலம் பற்றி கதைத்த விடயங்களில் முஸ்லிம் மக்களுடைய பெரிய பிரச்சினையாக இருப்பது பிளவுபட்ட பூமியில் உயிர் வாழ்வது என்பதாகும். பொதுவாக முழு முஸ்லிம்களைப் பற்றியதானாலும், வடகிழக்கை மையப்படுத்தியதாகத்தான் அதிகம் பேசினோம். முன்னைய காலங்களில் பக்தி மார்க்க ஐக்கியம் இருந்ததால் பிளவு அவர்களைப் பெரிதாகப் பாதித்திருக்கவில்லை.

முன்னரெல்லாம், தமிழர்கள் பருத்தித்துறையில் இருந்து பொத்துவில் வரை எங்கள் பூமி என்று சொல்கின்ற நிலையில் இருந்தார்கள். முஸ்லிம்களும் பருத்தித்துறையில் இருந்து அம்பாறை வரை எங்களுடைய பூமி என்ற சொல்கிற சூழலில்தான் இருந்தனர். பக்தி மார்க்க காலங்களுக்குப் பிறகு , அரசியல் மோதல் வந்த காலங்களில் இந்தப் பிளவு நிதர்சனமாகிவிட்டது. . இந்தப் பிளவை சீர்செய்து நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, புவியியல் ரீதியில் இணைப்பதை மேல் மட்ட அரசியலால் செய்ய முடியாது என்பதால் ஒவ்வொரு முஸ்லிம் பிரதேசங்களிலும் துடிப்பான இளைஞர்களை உள்ளடக்கிய கிளைகளைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதைப் பற்றியும் நாங்கள் பேசினோம். அந்தக் கிளைகளை புதிய தொழில்நுட்பம் மூலம் முஸ்லிம் பிரதேசங்களை இணைந்ததொரு புவியிலாக மெய்நிகராக மாற்றுவதைப் பற்றிப் பேசினோம்.


அவர்கடைசியாகப் பேசிய முக்கிய விடயம், முஸ்லிம் மக்களுடைய குடியிருப்புகள் பற்றியதாகும். நானும் அதனை வலியுறுத்தினேன். 10, 20 பேர் சேர்ந்து நவீன தொடர் மாடியாகக் கட்டங்களைக் கட்டியெழுப்பி ,வளவுகளை மிச்சப்படுத்த வேண்டும். காத்தான்குடிக்குப் போனால் எனக்கு கண்ணீர் வரும். மூச்சு விடக் கூட இடம் இல்லாதமாதிரி இருக்கும் அந்த ஊரில் பிள்ளைகள் விளையாடுவதற்கு, மழை நீர் நிலத்தடிக்கு வழிந்தோடுவதற்கு , எல்லாவற்றிற்கும் மேலாக வளவை மிச்சம் பிடிப்பதன் அவசியம் பற்றியும் தொடர் மாடி வீடுகள் உருவாக வேண்டும் என்றும் பேசினோம்.

தொடர்ந்து பேசுவதற்கு இன்னும் நிறைய விடயங்கள் இருக்கின்றன. நேரம் கருதி சுருக்கிக் கொள்கிறேன்.

மொத்தத்தில்,எனது பார்வையில் தலைவர் அஷ்ரபும், தந்தை செல்வாவும் இன ஐக்கிய சர்வ மத சமரசப் பார்வையின் இரண்டு முகங்கள் என்பேன்.

**1970 களில் தமிழ்ப்பகுதிகள் உட்பட இலங்கை முழுவதிலும் பொருளாதாரத் தடை இருந்தது. அந்தத் தடையால் சிங்கள மக்கள் பெரிதாகப் பாதிக்கப்பட்டாலும், தமிழர்களைப் பொறுத்தவரையில் குறிப்பாக வடகிழக்கு தமிழர்களைப் பொறுத்தவரையில் பொருட்களின் விலையேற்றத்துடன் பல்வேறு விடயங்கள் நடந்தன. முஸ்லிம்களுடன் ஒப்பிடுகையில் தமிழர்களில் மத்திய தர வகுப்பினரின் வளர்ச்சி சற்று வேறுபட்டது. மினரிகளுடைய காலங்களில் ஆரம்பித்தது.அந்த வளர்ச்சியின் தொடர்ச்சியாக 70 களில் ஏற்பட்ட பஞ்சங்களினால் மலையகத் தமிழர்களில் ஒரு சாரார் அநாதைகளாக வீதியில் அலைய நேர்ந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் மத்திய தர வர்க்கத்தினரின் வளர்ச்சி இருந்தது.**

தொகுப்பு : சஞ்சீவி



# திக்குவாய், பேச்சுத்திணறல் அல்லது பேச்சு கோன்னல் என்றால் என்ன?

## விளக்குகிறார் விசேட குழந்தை நல வைத்திய நிபுணர் டாக்டர் விஜி திருக்குமார்



பேச்சுத்திணறல் ஒருவரின் இயல்பு வாழ்க்கையில் பாரிய சவால்களை ஏற்படுத்துகின்றது. அதனை பேச்சுத்திணறல் (Stuttering/ stammering) அல்லது பேச்சு கொன்னல் என்பார்கள். இதற்கு சிகிச்சை அவசியமென கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஸ்ட விரிவுரையாளரும் மட்/போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல வைத்திய நிபுணருமான வைத்தியகலாநிதி வைத்தியர் .விஜி திருக்குமார் தெரிவித்தார்.

சிறுவரிடையே பரவலாக காணப்படும் திக்குவாய் அல்லது கொன்னல் தொடர்பாக கேட்டவினாக்களுக்கு அளித்த விளக்கங்கள் இங்கு தரப்படுகின்றன.

### திக்கு வாய் என்றால் என்ன?

திக்கு வாய் என்று பேச்சு வழக்கில் அழைக்கப்படும் பேச்சு தினறல் நோய் நிலைமை சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் ஏற்படும்.அதாவது கோர்வையாக தொடர்ந்து பேசுவதில் சிரமம் ஏற்படுதலே பேச்சு தினறல் ஆகும்.ஒரு சொல்லின் உச்சரிப்பைஃஒரு சொல்லை திரும்ப திரும்ப கூறுதல்இ பேச ஆரம்பிக்கும் போது அல்லது பேசிக் கொண்டிருக்கும் போது இடையில் வசனம் தடைப்படல்ஒரு உச்சரிப்பை நீட்டி உச்சரித்தல் இதன் பொதுவான அறிகுறிகள் ஆகும்.

### இது ஏற்படுவதற்கான பொதுவான காரணங்கள் ;

1. நரம்பு செல்கள் விருத்தி அடையும் போது ஏற்படும் தாமதம் அல்லது மாறுபாடு.இது developmental stuttering என அழைக்கப்படும். பொதுவாக 24 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு ஏற்படும்

2.ஏதாவது ஒரு நோய் நிலைமை ஏற்பட்டதன் காரணமாக பேச்சு தினறல் ஏற்படல். இது Neurogenic stuttering என அழைக்கப்படும்.இதனை சிறியவர்இபெரியவர் இருவரிலும் பொதுவாக அவதானிக்கலாம்.

3.மன ரீதியான அழுத்தங்களினால் ஏற்படுதல் அதாவது திடிரென நிகழ்ந்த அதிர்ச்சியான அல்லது சோகமான ஒரு சம்பவத்தின் பின்னர் பேச்சு தினறல் ஏற்படல்.இது Psychogenic stuttering என அழைக்கப்படும்.இதனை சிறியவர் பெரியவர் இருவரிலும் நிகழலாம்.

### காட்டும் அறிகுறிகள்

சிறுவர்கள் தனக்கு பேச்சு கொன்னல் பிரச்சினை இருக்கு என்பதை உணர முன்னர் தொடர்பாடல்களை மேற்கொள்வதில் சிரமங்களை சந்திப்பார்கள்.

பேச்சு திணறல் ஏற்படும் பேது உடல் ரீதியாகவும் சில செயற்பாடுகளை வெளிப்படுத்துவார்கள். உதாரணமாக கண்களை அதிகமாக சிமட்டல்இ கைகளை உதறல்ஃ அடித்தல் ...

தனது பேச்சு கொன்னலை தெரிந்து கொண்டதன் பின்னர் தங்களை பிறரிடம் இருந்து தனிப்படுத்திக் கொள்வார்கள்.

மற்றவர்களுடன் உரையாட தயங்குவார்கள் பயப்படுவார்கள்.




உளரீதியான அழுத்தங்களும் அதிகரிக்கும்.

மேலும் பாடசாலையில் ஆசிரியர் சக மாணவர்களுடன் உரையாட தயங்குவார்கள்.

மேடைப் பேச்சுக்கள் மற்றும் கலை விழாக்களில் ஈடுபட மாட்டார்கள்.

தெரிந்தவர்களுடன் உரையாடும் போது கூட கண்களை பார்க்காமல் , அவதானிக்காமல் பேசி முடிப்பார்கள்.

பெரியவர்கள் தங்களது பேச்சு பிரச்சினையை மறைக்க அதிகமாக தங்களை தாங்களே தனிமைப்படுத்துவார்கள்.

எந்த உச்சரிப்பில் திக்கு ஏற்படுகிறதோ அதற்கு பதிலாக வேறு இலகுவான செற்களை பாவித்து பேச முயற்சிப்பார்கள்.

பிறருக்கு தங்களை அறிமுகப்படுத்துவதிலும் இநேர்காணலை தொடர்வதிலும் அதிக அளவில் சிரமப்படுவார்கள். மன ரீதியான அழுத்தம் உடையவர்களாகவும் தன்னம்பிக்கை குறைந்தவர்களாகவும் இருப்பார்கள்.

சிறுவர்கள் தனக்கு பேச்சுத்திணறல் இருக்கின்றது என்பதை உணர்ந்தால் பல விடயங்களில் தாழ்வுமனப்பான்மையு. டன் பின்னடிப்பார்கள்.

### சிகிச்சை இருக்கிறதா?

பேச்சு திணறல் பிரச்சினை ஏற்படும் போது உரிய நேரத்தில் வைத்தியரை நாடி அவற்றுக்கான காரணங்கள்இவகைகளை கண்டறிந்து சிகிச்சை முறைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இவற்றின் மூலமாக சிறந்த முன்னேற்றகரமான விருத்தியை அவதானித்தலுடன் மன அழுத்ததையும் குறைக்கலாம்.

(காரைதீவு நிருபர்
வி.ரி.சகாதேவராஜா)




நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


GRÜNAU 1
# ITALY # INDIAN # THAI # SRILANKA
Fruhstuck / Mittagessen / Abendessen
Öffnungszeiten
Montag - Sonntag
08:00AM - 22:00PM
ORDER NOW
TANDOORI
FISH SPL
BBQ GRILL
BIRIYANI SPL
CURRY GERICHTE
MIX SABJI DESERTSLIEF
CALL for FREE DELIVERY
044 260 2222 079 563 2222
Meierwissenstr 58, 8064 Zürich
www.grunau1restaurant.com

# அரசின் திட்டமிடாத தன்மையால் விவசாயிகளும் பஞ்சத்தை எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது

## செல்வம் அடைக்கலநாதன்



(வாஸ் கூஞ்ஞ)

-அரசின் திட்டமிடாத தன்மையால் சாமானிய விவசாயிகளால் விவசாயம் செய்ய முடியாத நிலை தலைதூக்கியுள்ளது. இதனால் நாட்டில் மட்டுமல்ல விவசாயிகளும் உணவின்றி தவிக்கும் நிலை மாற்றம் பெற்று வருகின்றது என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தனது ஊடக சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி பாராளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வியாழக் கிழமை தனது மன்னார் அலுவலகத்தில் நடாத்திய ஊடக சந்திப்பின்போது தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

அரசாங்கத்தின் திட்டமிடாத செயல்பாட்டால் இன்று பல போராட்டங்கள் எமது நாட்டில் தலை தூக்கிக் கொண்டு இருக்கின்றன.

குறிப்பாக இன்று எமது விவசாயிகளின் நிலமை படும் மோசமாக காணப்படுகின்றது.

இந்த நாட்டுக்கு உணவு வழங்குகின்ற விவசாயி களின் நிலமையானது பெரும் திண்டாட்டத்துக்கு மாறியுள்ளது கண்கூடாக காணப்படுகின்றது.

சாமானிய விவசாயிகள் தங்களுடைய நிலங்க ளில் விவசாயம் செய்வது ஒரு பக்கம் குத்தகை அடிப்படையில் நிலம் பெற்று விவசாயம் செய் யும் விவசாயிகள் மறுபக்கம் இங்கு காணப்படு கின்றது.

இன்று குத்தகை அடிப்படையில் விவசாயம் செய்வோர் 30 ஆயிரம் தொடக்கம் 40 ஆயிரம் வரை நிலத்தைப் பெற்று விவசாயம் செய்யும் நிலை இங்கு காணப்படுகின்றது.

இவர்கள் வங்கி கடன் தங்கள் உடமைகளை அடகு வைத்துக் கொண்டுதான் இவ்வாறான விவ சாயத்தை மேற்கொண்டு வருகின்றார்கள்.

விவசாயிகளுக்கு உரம் வழங்கப்படாமையால் எமது விவசாயிகள் மிகவும் மோசமான முறைக்கு தள்ளப்பட்டு வருகின்றார்கள்.

அத்துடன் இவர்களுக்கும் தங்களுக்குத் தேவை யான உணவு பெற முடியாத வாய்ப்பு எற்படுகின் றது.

அரசாங்கம் ஒரு திட்டமிடாத முறையில் நடந்து கொண்டமையால்தான் இவ் நிலமை ஏற்பட் டள்ளது. அதாவது விவசாயிகளை சேதன பச ளைக்கு மாற்றுவதற்கு முன் இவர்களுக்கு சந்தர்ப் பம் வழங்கப்பட வேண்டும்.

திடீரென உரங்களை நிறுத்திவிட்டு சேதன பச ளைக்கு மாறுங்கள் என்பது ஒரு வேடிக்கையான விடயமாக இருக்கின்றது.

விவசாயிகளுக்கு உரத்தை வழங்கிக் கொண்டு இயற்கை உரத்துக்கு இவர்களை மாற்றும் முயற் சியில் ஈடுபட்டு இருக்க வேண்டும்.

இன்று தங்கள் விவசாயத்தில் விளைச்சளை பெற முடியாத நிலை ஒருபுறமிருக்க தாங்கள் விவசாயத்துக்காக பெற்றக் கடனைக்கூட திருப்பிச் செலுத்த முடியாத நிலையை எதிர்நோக்கி எமது விவசாயிகள் இருக்கின்றார்கள்.

விவசாயிகளை நிந்திப்பதன் ஊடாக இலங்கை யில் பாரிய பஞ்சம் ஒன்று ஏற்பட போகின்றது.

ஆகவே அரசானது காலம் தாழ்த்தாது உடனிடி முடிவு ஒன்றை மேற்கொண்டு விவசாயிகளுக்குத் தேவையான உரம் மற்றும் மருந்து வகைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சாமானிய விவசாயிகளினதும் நாட்டு மக்களி னதும் நலன் கருதி அரசு விவசாயிகள் மட்டில் தீவிர அக்கரை கொள்ள வேண்டும் என இவ்வாறு தெரிவித்தார்.

# திருகோணமலை மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளராக கு.செந்தூரன் பதவி உயர்வு



(கமல்)

திருகோணமலை மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளராக பொறியலாளர் கு.செந்தூரன் பதவி உயர்வு பெற்று திருகோணமலையில்ல அமைத்துள்ள அலுவலகத்தில் உத்தியோக பூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்று கொண்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பொறியலாளராக கடமையாற்றி வந்த நிலையிலையே குறித்த பதவி உயர்வானது பிரத செயலளரினால் வழங்கப்பட்டுள்ளது.

களுவாஞ்சிகுடியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் முதலாவது நியமனத்தினை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசமான கிளிநொச்சி பிரதேச நீர்பாச பொறியலாக நியமிக்கப்பட்டு நான்கு வருடங்களும் அதன்பின்னர் , முல்லைத்தீவு பிர தேச நீர்ப்பாசன பொறியியலாளராக நியமிக்கப் பட்டு அப்பிரதேசத்தில் நான்கு வருடங்களும் கட மையாற்றியிருந்தார் இவர் கடமையாற்றிய இரு மாவட்டங்களிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் காணப்பட்ட குளங்களை புனர மைப்பதில் முன்னின்று உழைத்திருந்ததுடன் இரணைமடுக் குளம் உட்பட பரிய குளங்களை புனரமைத்ததுடன் சூரிய சக்தியில் இயங்கும் ஏற்று நீர்ப்பாசன திட்டத்தினை முதலில் ஆரம் பித்தமை பெருமை இவரைச்சரும். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசன அபிவிருத்திகு உதவியதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முதலாக களுதாவளையில் தூர்ந்துபோய் கிடந்த ஏற்று நீர்பாசனத்தை சூரிய சக்தியில் இயங்கவைத்த பெருமை இவரையே சாரும் இவ் வாறான இவரின் சேவையால் விவசா யிகள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் பெற்று விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது நடு ஊருக்குள் புகுந்த யானையின் அட்டகாசம் ; அதிகாலையில் பல சொத்துக்கள் சேதம்



(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துவரும் யானைக ளின் தொல்லையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வரு வதுடன் சொத்துக்களும் பெரு மளவில் யானைத்தாக்குதலுக்கு இலக்காகி வருகிறது. அதன் தொடர்ச்சியாக அதிகாலை இரண்டு மணியளவில் கல் முனை மாநகர சாய்ந்தமருது 03ம் பிரிவில் உள்ள பிரதேச ங்களுக்கு சென்ற யானை அங்கிருந்த பயிர்நிலங் களை முற்றாக சேதமாக் கியுள்ளதுடன், பயிர்கள், மரங்கள் முற்றாக அழிக் கப்பட்டுள்ளது. இதன்மூ லம் அருகில் குடியிருந்த பலரும் உயிரச்சுறுத்த லுக்கு இலக்காகி உள்ளனர்.

நேற்றிரவு சாய்ந்தமருதில் புகுந்து சுற்றுமதில்களை அடித்து நொறுக்கியிருக்கும் யானை பயிர் நிலங்களுக்கு அண்மையில் உள்ள அரிசி ஆலையொன்றினுள் புகுந்து அங்கிருந்த சேமிப்பறையை உடைத்து நெல் மூட்டைக ளையும் சாப்பிட்டு விட்டு சென் றுள்ளது. இதனால் பாரியளவு பொருளாதார நஷ்டம் ஏற்பட் டுள்ளதாகவும் இது தொடர்பில் பல அரச அதிகாரிகளுக்கு அறி வித்துள்ளதாகவும் பாதிக்கப் பட்ட மக்கள் ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களும் சமீ பத்தைய நாட்களில் இப்படி யான யானைத் தாக்குதலுக்கு இலக்காகி வருவதுடன் வன இலாகா அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்துவ தில்லை என்ற பரவலான குற்றச ாட்டு மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது. இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவை தலையிட்டு நிரந்தர தீர்வை பெற்றுத்தரு மாறு மக்கள் கோரிக்கை முன் வைக்கின்றனர்.

# மட்டு.செங்கலடியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை பெண்யொருவர் கைது பெருமளவு கசிப்பு கோடா கைப்பற்றல்



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிறகுட் பட்ட செங்கலடி பிரதேசத்தில் நேற்று மாலை மட் டக்களபபு மாவட்ட குற்ற விசாரடிணைப் பிரிவு பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பில் வீடொன்றில இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றி வளைக்கபட்டதாக குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பண்டார தெரிவித்தார்.

செங்கலடி பொதுச் சந்தை வீதியிலுள்ள வீடொன்றை தகவலொன்றின அடிப்படையில் சுற்றி வளைத்த பொலிசார் அங்கு சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்ததை முற்று கையிட்டனர்.

அங்கு கசிப்பு காய்ச்சிய நிலையில் பெண்ணொரு வர் கைது செய்யப்பட்டதுடன் 11000 மில்லி லீற்றர் கசிப்பு 40000 மில்லி லீற்றர் கோடா மற்றும் கசிப்பு தயாரிக்கும் பெருமளவு உபகரணங்களையும் பொலி ஸார் மீட்டுள்ளனர்.சந்தேக நபர் ஏறாவூர் சுற்றுலா நீ தின்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# எட்டாம் நாள் கிழக்கு வாணிவிழா!





(காரைதீவு நிருபர்)

இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் கிழக்கு மாகாணத்திற்கான நவராத்திரிவிழாவின் ஆறாம் நாள் விழா நேற்றுமுன்தினம் மாலை காரைதீவில் நடைபெற்றது.

இந்துசமய கலாசாரத் திணைக்களம் காரைதீவு பிரதேசசெயலகம் மற்றும் காரைதீவு விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து வரலாற்றில் முதற்தடவையாக இத்தகைய நவராத்திரிவிழாவை ஒழுங்குசெய்திருந்தது.

இந்துசமய கலாசாரத்திணைக்கள பணிப்பாளர் அருளாநந்தம் உமாமகேஸ்வரனின் வழிகாட்டலில் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜியின் ஒழுங்கமைப்பில் இவ்விழா சுகாதாரநடைமுறைவிதிக்கமைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

8ஆம்நாள் விழா காரைதீவு சுவாமி விபுலாநந்த பணிமன்றமுன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது. விசேடஅதிதிகளாக தலைவர் வெ.ஜெயநாதன் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தார்.இவ்விழாவில் அறநெறி மாணவரின் பேச்சு நடனமும் இடம்பெற்றது. விசேடபூஜை பஜனை வழிபாடும் ஒருமணிநேரம் இடம்பெற்றது.

திணைக்களத்தின் உதவிப்பணதிருமதி ஹேமலோ ஜினி குமரன் மெய்நிகர் அலையில் உரையாற்றினார்.

இந்துகலாசாரஅமைச்சின் காரைதீவு சுவாமிவிபு லாநந்தர் கற்கைகள் நிறுவக மாணவியரின் நடனம் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நடனம் பேச்சு நடைபெற்றது.

இந்துசமயகலாசார உத்தியோகத்தர் பி.பிரதாப் நிகழ்ச்சிகளை தொகுத்து நெறிப்படுத்தினார்.

இவ்விழா ஒன்பது நாட்களும் பல்வேறு கலைநி கழ்வு சொற்பொழிவுடன் இடம்பெற்று நேற்று(15 )வெள்ளி விஜயதசமியன்று ஏடுதொடக்கல் வித்தி யாரம்பத்துடன் நிறைவடைந்தது என பணிமன்ற செயலாளர் கு.ஜெயராஜி தெரிவித்தார்.

# கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பம்

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)



நாட்டில் ஏற்பட்ட கோவிட் -19 கொரோனா சூழ்நிலை காரணமாக ஒன்றரை வரு டங்களுக்கு மேலாக மூடப் பட்டிருந்த பாடசாலைகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம் பிப்பதற்கான சகல வேலைத் திட்டங்களையும் முன்னெடுத் துள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் தெரிவித்தார்.

நேற்று இதன் ஆரம்ப நிகழ் வாக திருகோணமலை ஸ்ரீ சுமேதங்கர மகா வித்தியாலயத் தில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலை மையில் சிரமதானப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது

இதன்போது பாடசாலையின் வகுப்பறை கட்டமைப்பு,குடிநீ ர் வசதி மாணவர்கள் வகுப் பறையில் இருப்பதற்கான இடவசதி மற்றும் தளபாட வசதிகள் போன்றவற்றை கிழக்கு மாகாண ஆளுநர் அனு ராதா யஹம்பத் இதன்போது ஆராய்ந்தார்.

மேலும் அவர் ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கும் போது...

கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளும் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம் பிக்கப்படவுள்ள நிலையில் அனைத்து பாடசாலைக ளிலும் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதா கவும் பாடசாலைகளில் குடிநீ ர் வசதி சுகாதார நடைமுறை களை பின்பற்றுதல் போன்ற நடைமுறைகளை பேணுவதற் கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 21ஆம் திகதி பாட சாலைகள் ஆரம்பிக்கப்பட்ட தன் பின்னர் பாடசாலைக்கு மாணவர்கள் இரண்டு வாரங்க ளுக்கு சீருடை அவசியமில்லை எனவும் சாதரண உடையின் சமூகமளிக்க முடியும் எனவும் இவ்வாறு இரண்டு வாரங்க ளுக்கு கல்வி செயற்பாடுகளை முன்னெடுக்காமல் இணைப் பாடவிதான செயற்பாடுகள் முன்னெடுக்குமாறு அதிபர்க ளுக்கு ஆலோசனை வழங்கி யுள்ளதாகவும் இதன்போது தெரிவித்தார்.

மேலும் மாணவர்களின் உடல் வெப்பநிலையினை அறிவதட்க்கு உடல் வெப்ப மானியும் இதன்போது பாடச ாலை அதிபரிடம் கையளிக் கப்பட்டதுடன் ஆரம்பிக்கப் படும் பாடசாலை தொடர்ந்து மூடாமல் இருப்பதற்கு ஆசி ரியர்கள் அதிபர்கள் மற்றும் பெற்றோர்களின் முழு ஒத்து ழைப்புடன் பாடசாலையினை முற்று முழுதாக சிரமதானம் செய்து சிறந்த முறையில் பாட சாலையை ஆரம்பிப்பதற்கு ஒத் துழைப்பு வழங்குமாறு இதன் போது கேட்டுக்கொண்டார்

மேலும் இந்நிகழ்வில் திரு கோணமலை மாவட்ட அர சாங்க அதிபர் சமன் தரிசன பாண்டிகோரள மற்றும் உப்பு வேளி பிரதேச சபை தலைவர் உட்பட அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டு சிரமதானப் பணியை முன்னெடுத்து இருந் தமை குறிப்பிடத்தக்கது.நாட் டில் ஏற்ப்பட்ட கோவிட் -19 கொரோனா சூழ்நிலை காரண மாக ஒன்றரை வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த பாட சாலைகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிப்பதற்கான சகல வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்துள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் தெரிவித்தார்.

# அம்பாறை மாவட்டத்தில் முதன் முறையாக Drum Seeder ஐ பயன்படுத்தி நெல் விதைக்கும் முறை ஆரம்பம்

(ஏ. எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் முதன் முறையாக Drum Seeder ஐ பயன்படுத்தி நெல் விதைக்கும் முறை உத்தி யோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஹேன்ட் ரிட்ச் (Handrich) விவசாய பராமரிப்புத் தீர்வு கள் மற்றும் கைத்தொழில் நிலையத்தின் அனுசரணையு டன் அட்டாளைச்சேனை விவசாய விரிவாக்கல் நிலை யத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் வழிகாட்டலுடன் நிறுவனத்தின் தலைவர் எஸ்.எல் முஹம்மது அன்வர் தலைமையில் அட்டாளைச்சேனை மீலாத் நகர் விவச ாய பிரதேசத்தில் இடம்பெற்ற இன் நிகழ்வில்,நஞ்ச ற்ற உணவு பாவனை, இலாபமீட்டும் நவீன விவசாய முறைகள், அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட் டுள்ள சேதனப் பசளை பயன்பாடு மற்றும் அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு Drum Seeder முறையினை பாவித்து வரிசையில் நெல் விதைப்பதால் ஏற்படும் நன்மைகள்குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக விளக் கமளிக்கப்பட்டது.இதில் அம்பாறை மாவட்ட விவச ாய பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஸ், பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எப்.ஏ.சனீர், விவசாய போதனாசிரி யர் ஏ.எச்.எம். முபாறக், கமநல சேவை நிலையத்தின் பெரும்போக உத்தியோகத்தர் எம். சம்சுதீன், ஹேன்ட் ரிட்ச் நிறுவனத்தின் பிரதிநிதிகள், பிரதேச விவசாயிகள், பிரதேச விதை நெல் விநியோகஸ்தர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.



# சக்தியின்றேல் உலக இயக்கம் ஸ்தம்பித்துவிடும்.!

## இந்துகலாசாரஅமைச்சின் கிழக்குமாகாண நவராத்திரி விழா காரைதீவில்







இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலகமும் ,சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடாத்தும் நவராத்திரி விழா முதன்முறையாக தொடர்ச்சியாக நடைபெற்றுவருகிறது.

காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் இவ்விழா தினமும் ஒரு பிரதேச செயலாளர் தலைமையில் ,தினமும் ஒரு விசேட சொற்பொழிவாளருடன் ,அறநெறி மாணவரின் கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றுவருகிறது.

இந்துசமய கலாசாரத்திணைக்கள பணிப்பாளர் அருளாநந்தம் உமாமகேஸ்வரனின் வழிகாட்டலில், திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜியின் ஒழுங்கமைப்பில் இவ்விழா சுகாதாரநடைமுறைவிதிக்கமைய ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.தினமும் ஒரு அறநெறி பாடசபலை மாணவர்கள் மாத்திரம் கலந்துகொள்ளும்பொருட்டு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.



இடையிடையே ,கிழக்கு பல்கலை சுவாமி விபுலாநந்த வளாகத்தின் மாணவர்களது மிருதங்க சமர்ப்பணம் ,வீணாகானம் ,,பண்ணிசை வயலின் கச்சேரி போன்ற கலைக்கதம்பமும் இடம்பெற்றன. இந்துசமயகலாநார அலுவல்கள் திணைள்களத்தின் பணிப்பாளர் அருளாநந்தம் உமாமகேஸ்வரன் மற்றும் இந்தியாவிலிருக்கும் உலகப்புகழ்பெற்ற ஆன்மீக ஓவியர் க.பத்மவாசன் ஆகியோர் மெய்நிகரில் வந்து விழாவுககு அணிசேர்த்தனர்.

இந்தப்பிரபஞ்சத்தை இயக்குவது சக்தி. சக்தியின்றேல் உலக இயக்கம் ஸ்தம்பித்துவிடும்.அத்தகைய சக்தியைபெறும்நோக்கில் பராசக்தியை வழிபடுவதே நவராத்திரி ஆகும்.இந்துசமயதத்துவங்கள் விஞ்ஞானம் கலந்த ஆன்மீகக்கலவையாகும்.

காரைதீவில் நடைபெற்றுவரும் கிழக்குமாகாண நவராத்திரிவிழாவில் திருக்கோவில் பிரதேசசெயலாளர் தங்கையா கஜேந்திரன் தெரிவித்தார்.











அங்கு விசேடமாக திருவிளக்குப்பூஜையும் இடம்பெற்றமை விசேட அம்சமாகும். மேலும் அறநெறி பாடசாலை மாணவர்களின்ஓங்காரம்அஸ்ரோத்திரம் பஜனைபூசை நிகழ்வுமற்றும் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன.

சிறப்புசொற்பொழிவினை ஆசிரியை திருமதி அருந்தவவாணி சசிக்குமார் நிகழ்த்தினார். மற்றும் விபுலாநந்த பணிமன்றமுன்னாள்தலைவர் வி.ரி.சகாதேவராஜாவும் கலந்துகொண்டு நன்றியுரையாற்றினார்.இந்து சமய கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மன்ற உறுப்பினா்கள் கலந்துகொண்டனர்.இந்துகலாசார உத்தியோகததர் கே.பிரதாப் நிகழ்ச்சிகள் அனைத்தையும் தொகுத்துநெறிப்படுத்திவழங்கினார்.

மேடையில் கலை நிகழ்ச்சியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

அறியாமை எனும் இருளைப் போக்கி ஞான ஒளியை உள்ளமெங்கும் பரவச்செய்யும் பூஜையாகவேநவராத்திரி காணப்படுகிறது.

அவனின்றி அணுவும் அசையாது. அவளின்றி அவன் அசையான்' என சிவத்தில் பாதியாக விளங்கும் சக்தியினை நோக்கி ஒன்பது இராத்திரிகள் அனுஸ்டிக்கப்படும் விரதமே நவராத்திரி ஆகும்.

தேவி வழிபாட்டின் தொன்மைக்கு கன்னி மாதத்தில் நடைபெறும் நவராத்திரி வழிபாடே சான்றாகும். இவ்வழிபாடு எப்பொழுது தோன்றியதென்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. மிகத் தொன்மை வாய்ந்தது. இச்சக்தி வழிபாடு சிறிது பெயர் மாற்றங்களுடன் உலகம் முழுவதும் பரவியிருந்திருக்கிறது.

சக்திக்கு ஒன்பது இராத்திரி; சிவனுக்கு ஒரு இராத்திரி; அது சிவராத்திரி. இதிலிருந்தே சக்தி வழிபாட்டின் மேன்மை விளங்குகிறது.

சித்திரையில் வருவது 'வசந்த நவராத்திரி' எனவும் புரட்டாதியில் வருவது 'சாரதா நவராத்திரி' எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்விரண்டு காலங்களிலும் கோடை குளிர் என இருபருவகாலமும் மாறும்போது நோய்நொடிகள் பரவும். இந்த ஆபத்திலிருந்து மக்களைக் காக்கும்படி தேவியை பூஜிக்கவேண்டும் என்பதால் இவ்விழாவை நடத்தப்படுகிறது.

அதிலும் காலசுழற்சியில் வசந்த நவராத்திரி விழா கொண்டாடும் முறை வழக்கொழிந்துவிட்டது. சாரதா நவராத்திரி விழா இன்றளவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை சிறப்பு.

நவராத்திரியின் சிறப்புஇ அனுஸ்டிக்க வேண்டிய முறைஇ கிடைக்கும் பலன்கள் பற்றிஇ தேவி மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது. முன்னொரு காலத்தில் நிசும்பன்இ சும்பன் என இரு அசுரர்கள் இருந்துள்ளனர். அவர்கள் கடவுளிடம் பல வரங்களைப்பெற்று தங்களை அழிக்க யாரும் இல்லை என்ற ஆணவத்தோடு ஆட்சி செய்த காலத்தில் மக்களை பெரும் துன்பத்தில் ஆழ்ந்தார்கள். இந்த அசுரர்களின் ஆணவத்தை அடக்கத் திண்ணம் கொண்டு மகா விஷ்ணுவிடமும் சிவனிடமும் முறையிட்டனர்.

அவர்கள் பிரம்மனையும் சேர்த்துக்கொண்டு இந்த அசுரர்களை அழிக்கும் சக்தி அன்னை ஆதிசக்தியிடமே உண்டு என்பதை அறிந்து தேவியை பூலோகத்துக்கு அழைத்தனர்.

மும்மூர்த்திகளும் தாங்கள் சக்திகளையெல்லாம் ஒன்றாக்கி தேவிக்கு அளித்துவிட்டு சிலையென நிற்கவே இந்திரன் அட்டத்திக்கு பாலகரும் தங்கள் ஆயுதங்களையெல்லாம் தேவிக்கு அழித்துவிட்டு சிலையாகவே காட்சி தந்தார்கள். இவர்கள் இப்படி சிலையாக நிற்கும் காட்சியே கொலு வைக்கும் மரபாக வந்தாக அறிய முடிகின்றது.

இவ்வாறாக போர்கோலம் பூண்டதேவி நிசும்பன் சும்பன் எனும் இரு அசுரர்களையும் அழித்து தர்மத்தை நிலைநாட்டினார். அவள் வெற்றி பெற்ற தினமே விஜய தசமியாகும். போர் ஒன்பது நாள்கள் விடாது நடைபெற்றது. ஆனாலும் அக்கால போர் சட்டதிட்டங்களின் படிஇ மாலை நேரம் சூரிய அஸ்தமனத்தின் பின்னர் போர் புரிவதை நிறுத்தி விடுவார்கள். அவர்கள் ஒய்வெடுக்கும் நேரத்தில் அன்னையின் படைக்கு உந்துதல் கொடுக்கும் வகையில் அன்னையை குறித்து ஆடல் பாடல் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளதையும் அறிய முடிகின்றது. எனவே இரவில் இந்நிகழ்வு நடைபெறுவதாலே நவராத்திரி எனவும் கொள்ள முடியும்.

மேலும் இந்த விரதத்தை தெய்வங்கள் முதல் தேவர்களும் கடைப்பிடுத்து பயனடைந்துள்ளதையும் அறியமுடிகிறது. உதாரணமாக இராமர் இராவணனிடமிருந்து சீதையை மீட்டது. பஞ்சபாண்டவர்கள் பாரதபோரில் வென்றமை. இதனுடாக அறியப்படுவது தீய சக்திகள் மேலோங்குகையில் அம்பாள் காத்து அருள் புரிவாள் என்பதாகும்.

இதில் அறிவியல் காரணமும் இருக்கிறது. இந்த ஒக்டோபர் மாதம் என்பது மழை பெய்யும் காலம். இந்தப் காலங்களில் இரவு நேரம் குறைவாக இருக்கும். எனவே சீதோஷ்ண நிலைக்கு நம் உடலை மாற்றும் வகையிலேயே நவராத்திரி பண்டிகைகள் கொண்டாடப்படுகிறது. இந்த ஒன்பது நாட்களிலுமே பூஜை செய்யப்பட்டு சுண்டல் போன்ற புரதம் அடங்கிய உணவுகள் சாப்பிடுவதால் உடலும் தெம்புபெறும். நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும்.

நவராத்திரியில் ஒன்பது நாள்களும் பூஜை விரதம் அனுஷ்டிக்க வேண்டும். இயலாதவர்கள் அஷ்டமி நாளில் மட்டுமாவது விரதமிருத்தல் வேண்டும். தசமி தினத்தில் வதம்செய்து வாகை சூடியதால் ஆணவம் சக்தியாலும் வறுமை செல்வத்தாலும் அறியாமை ஞானத்தினாலும் வெற்றி கொள்ளப்பட்ட நாள் என்பதால் முப்பெரும் தேவியை வணங்கி எல்லாக் காரியங்களும் எளிதில் வசமாகவும் அன்றைய தினம் புனிதமான காரியங்களை தொடங்கி இந்த ஜென்மத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து பிறவிப் பயனாகிய பேரின்ப நிலையை அடைவோமாக!

(வி.ரி.சகாதேவராஜா காரைதீவு நிருபர்)





# சஞ்சிகை வெளியீட்டு விழா

## புத்தாக்க அரங்க இயக்கம் வழங்கும்

## அரங்க கதையாடல்

## கதையாடல் 35




**காலம் - 17.10.2021 (ஞாயிற்றுக்கிழமை)**

இலங்கை,இந்தியநேரம் இரவு 7 மணி
பிரித்தானிய நேரம் மாலை 2.30 மணி
கனடா நேரம் காலை 9.30
ஐரோப்பிய நேரம் மாலை 3.30



**தலைமை**
**வேதநாயகம் தபேந்திரன்**
எழுத்தாளர்,மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர்



**சிறப்பு அதிதி**
**கலாநிதி க.கஜவிந்தன்**
சிரேஸ்ர விரிவுரையாளர்
மெய்யியல் - உளவியல் துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்



**வாழ்த்துரை**
**கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்**
தலைவர் தெல்லிப்பழை துர்க்காதேவி
தேவஸ்தானம் சிவபூமி, அறக்கட்டளை



**பரதகலாவித்தகர் திருமதி**
**மதிவாணி விக்னராஜா**
ஓய்வு நிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் (அழகியல்)
வடமாகாண கல்வித்திணைக்களம்



**வெளியீட்டுரை**
காரைக்கவி கந்தையா பத்மானந்தன்
மேனாள் செயற்றிட்டப் பணிப்பாளர்
கல்விஅமைச்சு



**விமர்சன உரை**
**முனைவர் ஜெ.முனுசாமி (யாழினி முனுசாமி)**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
தமிழ்நாடு இந்தியா



**ஏற்புரை**
**எஸ்.ரீ.குமரன்,**
**எஸ்.ரீ.அருள்குமரன்**
பிரதமஆசிரியர்

zoom
Meeting ID
6473348261
Pass code:ITM

தலைமையகம்
'சக்திவாசா' கோவில்வீதி, மல்லாகம்.
யாழ்ப்பாணம், இலங்கை



**நன்றியுரை**
**SR.சாது**
ஆற்றுகை இணைப்பாளர்

தொடர்புகளுக்கு : +94 779596710 Kumarandrama@gmail.com

Design by : SR.Shathu




# இராணுவத்தின் 72வது வருட பூர்த்தியினை முன்னிட்டு மட்டக்களப்பில் உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைப்பு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இலங்கை இராணுவத்தின் %2வது வருட பூர்த்தியினை முன்னிட்டு மட்டக்களப்பில் உலர் உணவுப்பொதிகள் வழங்கும் நிகழ்வு வவுனதீடு நெடியமடு கிராமத்தில் இடம்பெற்றது.

இராணுவத்தின் 72வது வருட பூர்த்தியினை அனுஷ்டிக்கும் வகையில் உன்னிச்சை நெடியமடு பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளான மற்றும் கொரோனாவினால் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு இதன்போது அரிசி, பருப்பு, மா, சீனி, கடலை, நெத்தலி கடுவாடு, தேயிலை, சவற்காரம், சேயா உள்ளிட்ட மேலும் பல உலருணவுப் பொருட்கள் அடங்கிய பொதியினை 50 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் 23வது படைப்பிரிவின் இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் கே.ஏ.என்.என்.கொஸ்வத்த, 231வது படைப்பிரிவின் பிரிக்கேடியர் திலுப பண்டார மற்றும் மாவட்ட சிவில் இராணுவ தளபதி, படைப் பிரிவின் தளபதிகள், உன்னிச்சை கெமுறு 4வது படைப்பிரிவின் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு இவ் உலர் உணவுப்பொதிகளை வழங்கி வைத்தனர்.

# வாழ்வாதாரத்திற்காக ஆடுகள் வழங்கல்



(எம்.ஐ.எம்.றியாஸ்)

அரசினால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் செளபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஹுசைனுதீன் தலைமையில் ஒலுவில் அஷ்ரப் நகரில் நடைபெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி பாத்திமா நஹீஜா முஸாபிர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 20 பண்ணையாளர்களுக்கு ஆடுகளை வழங்கி வைத்து இத்திட்டத்தினை ஆரம்பம் செய்து வைத்தார்.

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகப்பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட %2 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்யும் வண்ணம் தலா ஓர் இலட்சம் ரூபாப் பெறுமதியில் செளபாக்கியா சமுர்த்தி வாரத்தினை முன்னிட்டு பகுதி பகுதியாக ஆடுகள் வழங்கப்படடு வருவதுடன் மக்கள் பங்காளிப்புக்காக தெரிவு செய்யப்பட்ட இப்பயனாளிகள் தலா ஓர் இலட்சம் ரூபா முதலீடும் செய்துள்ளனர்.

முதல் கட்டமாக ஒலுவில் 1ம், 2ம், 4ம், 5ம், 6ம், 7ம் கிராம சேவகர் பிரிவுகள், பாலமுனை 1ம் 6ம் கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் தீகவாபி 1ம் 2 ம் பிரிவுகளை உள்ளடக்கி மேற்படி கிராமங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு முதலாம் கட்டமாக தலா ஓர் இலட்சம் பெறுமதியில் பகுதி பகுதியாக ஆடுகள் பண்ணையாளர்களிடம் விநியோகம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை கால் நடை வைத்திய அதிகாரி டாக்டர் டஹானா ஹனீஸ், அட்டாளைச்சேனை பிரதேச செயலக கணக்காளர் , பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரிவுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அரசாங்கத்தின் தேசிய கொள்கை வேலைத்திட்டத்திற்கமைவாக கிழக்கில் கோப்சிற்றிகள்

## ஆணையாளர் அஸ்மி



(ஏ.எல்.றியாஸ்)

அரசாங்கத்தின் தேசிய கொள்கை வேலைத் திட்டத்திற்கமைவாக கிழக்கு மாகாணத்தில் கோப்சிற்றிகளை அமைப்பதற்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம். அஸ்மி தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வு தொடர்பில் ஆராயும் மாநாடு கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கலாதேவி உதயராஜா தலைமையில் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் (14) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் தேசிய கொள்கை வேலைத்திட்டத்திற்கமைவாக கிழக்கு மாகாணத்தில் புதிதாக கோப்சிற்றிகளை அமைப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். அந்த வகையில் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவில், முதலாவது நுகர்ச்சிப்பிரிவு ''கோப் பிரஸ்'' கோப்சிற்றி சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டிடத்தில திறந்து வைக்கப்படவுள்ளது.

தற்போது கிழக்கு மாகாணத்தில் செயற்பட்டுவரும் 15 பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கோப்சிற்றிகளை நவீனமயப்படுத்துவதற்கு, மத்திய அரசாங்கத்தின் நிதியிலிருந்து தலா 5 இலட்சம் ரூபாவினை வழங்கி வருகின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் 27 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. அதில் தெரிவு செய்யப்பட்ட நான்கு எரிபொருள் நிலையங்களை நவீன வசதிகளை கொண்ட மாதிரி எரிபொருள் நிரப்பு நிலையங்களாக மாற்றியமைப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

அதேபோன்று, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கவர்ச்சிகரமான சூழலை உருவாக்குவதற்கும், கூட்டுறவு திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்களில் பனியாற்றுகின்ற ஊழியர்களுக்கென புதிய சீருடைகளை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு அரச சார்பற்ற நிறுவனமொன்று நிதி வழங்க முன்வந்துள்ளது.

கூட்டுறவு திணைக்களத்தினூடாக மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் பொருட்டு, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கூட்டுறவாளர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்கள், களக்கற்றல் விஜயங்கள் என பல்வேறு விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வின் போது சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவு சங்க கிராமிய வங்கியின் செயற்பாட்டை மேம்படுத்துவதற்கு கூட்டுறவு நிதியிலிருந்து ஒரு மில்லியன் ரூபா வழங்கி வைக்கப்பட்டது. அதற்கான காசோலையினை ஆணையாளர் அஸ்மி சங்கத்தின்தலைவர் எம்.எம். உதுமாலெப்பையிடம் வழங்கிவைத்தார்.

# வீட்டு திட்ட பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கிவைத்தார் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்



(கல்லடி நிருபர்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக வீடற்றவர்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் திட்டத்திற்கு அமைவாக மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள 13 வீடுகளிற்கான பயனாளிகளுக்கு ஒரு இலட்சம் பெறுமதியான முதலாம் கட்ட காசோலைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பட்டிப்பளை பிரதேச செயலாளர் திருமதி.தட்சனகௌரி டினேஸ் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக பட்டிப்பளை பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவரும்

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சருமான சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கிவைத்துள்ளார்.

இதன்போது தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவில் நிர்மானிக்கப்படவுள்ள வீடுகளிற்கான 13 பயனாளிகளுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 13 இலட்சம் பெறுமதியான காசோலைகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

சுகாதார வழிமுறைகளுக்கு ஏற்றாற்போல் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட முகாமையாளர் கே.ஜெகநாதன்,

இராஜாங்க அமைச்சரின் பட்டிப்பளை பிரதேசத்திற்கான பிரதான அமைப்பாளரும் பிரதேச சபை உறுப்பினருமாகிய வை.சந்திரமோகன், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர்கள் மற்றும் ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 5மாதங்களின் பின் கிழக்கில் முன்பள்ளிகள் ஆரம்பம்



(காரைதீவு நிருபர்)

நீண்ட கொரோனா விடுமுறையையடுத்து, கிழக்கு மாகாணத்தில் முன்பள்ளிப்பாடசாலைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுகாதாரநடைமுறை அவசியம் பின்பற்றப்பட்டுவருகின்றன.

கடந்த ஐந்துமாதகால கொரோனா விடுமுறையின் பின்னர் மீண்டும் கடந்த திங்களன்று முன்பள்ளிகள் கிழக்கில் திறக்கப்பட்டன.

கடந்த திங்களன்று(11) குறித்த பாடசாலைகளை ஆரம்பிக்குமாறு கிழக்கு முன்பள்ளிவாரியம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக சுகாதார முறைப்படி அவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பமானநாள்முதலே கூடுதலான சிறுவர்சிறுமியர் பாடசாலைக்கு வருவதில் அதிகமுனைப்புகாட்டினர். பெற்றோர்களும் அதிகஆர்வம்காட்டினர். நீண்டகாலமாக வீட்டில் அடைபட்டுக்கிடந்த சிறுவர்கள் குதூகலமாக பாடசாலைக்கு வருவதைக்காணமுடிந்தது.

சிறுவர்கள் கைகழுவுதலுடன் மாஸ்க் அணிந்து, சமுக இடைவெளியுடன் பழகுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. முன்பள்ளிகள் தோறும் பொதுச்சுகாதாரப்பரிசோதகர்கள் சென்று மாணவர்களுக்கான அறிவுரைகளை தெளிவுபடுத்திவருகின்றனர்.

காரைதீவு விபுலாநந்தா மொன்ரிசோரி முன்பள்ளிப்பாடசாலையில், நேற்று(14) பிரதேச பொதுச்சுகாதாரபரிசோதகர் பாடசாலையில் கொரோனாத்தவிர்ப்பு செயற்பாட்டிற்காக சிறுவர்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் எனும் அறிவுறுத்தல் செய்தியை வழங்கினார்.

# பிரான்ஸை தளமாக கொண்ட வாழ்வை மாற்றுவோம் அமைப்பினால் தாயக உறவுகளுக்கு நேரடியாக உதவி

## மக்களுக்கு நிவாரணம் கையளிப்பு



(தர்மேந்திரா)

பிரான்ஸை தலைமையாக கொண்டு மனித நேய செயற்பாட்டாளர் றூபி தலைமையில் கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக இயங்கி வருகின்ற வாழ்வை மாற்றுவோம் கலை கலாசார சமூக மேம்பாட்டு ஸ்தாபனம் முதன்முதலாக தாயகத்தில் கால் ஊன்றி உள்ளது.

தாயகத்தில் உள்ள உறவுகளுக்கு நேச சக்திகள் மூலமாக இது வரைகாலமும் சேவைகளை மறைமுகமாக ஆற்றி வந்த வாழ்வை மாற்றுவோம் கலை கலாசார சமூக மேம்பாட்டு ஸ்தாபனம் இப்போது நேரடியாக சேவையாற்ற தொடங்கி உள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த பொதுநல செயற்பாட்டாளர் அஹமட் லெப்பை அன்ஸார் இவ்வமைப்பின் இலங்கைக்கான பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு உள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமையும், நேற்று வெள்ளிக்கிழமையும் சாய்ந்தமருது, காரைதீவு ஆகிய பிரதேசங்களில் வறிய குடும்பங்களை சேர்ந்த 50 பயனாளிகளுக்கு உலர் உணவு நிவாரண பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



காரைதீவு சிவசக்தி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அதன் பரிபாலகர் ஜீவாகரன் ஐயாவின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து காரைதீவை சேர்ந்த பயனாளிகளுக்கு பொருட்கள் கையளிக்கப்பட்டன.

# குருவை நிந்திக்கும் அறிக்கையை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வாபஸ் பெற வேண்டும்

## தென்கிழக்கு கல்விப் பேரவை காட்டம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்கக்கூடாது என குருவை நிந்திக்கும் வகையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், வெளியிட்டுள்ள அறிக்கையை அச்சங்கம் உடனடியாக வாபஸ் பெறுவதுடன் பகிரங்க மன்னிப்பும் கோர வேண்டுமென தென்கிழக்கு கல்விப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பேரவையின் சார்பில் அதன் தலைவர் ஏ.எல்.முகம்மட் முக்தார் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கடந்த 24 வருடங்களாக ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டு வருகின்ற அநீதிக்கு எதிரான போராட்டங்களை ஆசிரியர் தொழிற்சங்கங்கள் சாத்வீகமாக முன்னெடுத்து வருகிறன. இந்த நீதியான போராட்டத்திற்கு நாட்டில் உள்ள பெரும்பாலான தொழில் சங்கங்கள் தமது ஆதரவை தெரிவித்து வருகின்றன.

ஆனால், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், ஆசிரியர்களின் கோரிக்கையை நிறைவேற்றக் கூடாது என அரசைக் கோரி அறிக்கை வெளியிட்டிருப்பதானது மிக மோசமான செயலாகும். இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம். தமக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு தமது வாழ்நாள் பூராவும் நன்றியுணர்வுடன் இருக்க வேண்டிய வைத்தியர் சமூகம் ஏறி வந்த ஏணியை உதைத்து விட்டு, ஆசிரியர்களது கோரிக்கையை நையாண்டி பண்ணும் விதத்தில் நடந்து கொள்வதானது குருவை நிந்தித்த குற்றத்திற்கு சமனாகும். இது ஆசிரியர்களது சாபத்திற்கு வழிவகுக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.



சுகாதாரத்துறையில் வைத்தியர்கள் சம்பள அதிகரிப்பு கோரி அப்பாவி நோயாளிகளை பணயம் வைத்து கடந்த காலங்களில் நடாத்திய போராட்டங்களுக்கு ஆசிரியர் சங்கங்கள் ஒருபோதும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இந்நிலையில், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வெளியிட்டிருக்கின்ற அறிக்கை ஆசிரியர்களை இழிவுபடுத்துவது மாத்திரமன்றி தொழிற்சங்கங்கள் மத்தியிலான ஒற்றுமையை சீர்குலைக்கும் செயற்பாடுமாகும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என தென்கிழக்கு கல்விப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

# திருமலை சிறி கோணேஸ்வரா இந்துக்கல்லூரி ஆரம்ப பிரிவு வளாகத்தில் சரஸ்வதி தேவிக்கு சிலை

(கதிரவன்)

திருகோணமலை சிறி கோணேஸ்வரா இந்துக்கல்லூரி ஆரம்பபிரிவு வளாகத்தில் சரஸ்வதி தேவிக்கு சிலை வைக்கும் நிகழ்வு நடபெற்றது.

இதனை நிறுவுவதற்கான பீடம் அமைப்பதற்கான அடிக்கல் நேற்று காலை நட்டு வைக்கப்பட்டது.

கல்லூரியின் 125 வது நிறைவு ஆண்டின் செயற்பாடாக இது அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது.

இலங்கை சின்மயாமிஷன் வதிவிட ஆச்சார்யா மகிமா சைதன்யா அடிக்கல்லினை நேற்று வெள்ளிக்கிழமை 2021.10.15 நட்டு வைத்தார்.

கல்லூரி பழைய மாணவன் தி.பிரபாதரன் இதனை அமைப்பதற்கான பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ளார். கல்லூரியின்





மேநாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், கல்லூரி இந்து மன்றத்தினர் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நவராத்திரி விழா!!









(மட்டக்களப்பு விசேட நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நவராத்திரி பூஜை நிகழ்வுகள் மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் சுகாதார விதிமுறைககளப் பின்பற்றி மிகவும் பக்தி பூர்வமாக நடைபெற்றது.

மாவட்ட கலாசார பிரிவின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற நவராத்திரி பூசை நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களது பங்கேற்புடன் இடம்பெற்றது.

அத்தோடு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் கே.ஜெகதீஸ்வரன், உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளர் திருமதி. இந்திராவதி மோகன், மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.தயாபரன், மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ்குமார், மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றை கொண்டு விளங்கும் முப்பெரும் தேவிகளுக்குரிய தினமாக இந்த நவராத்திரி தினம் ஒன்பது நாட்கள் அனுஸ்டிக்கப்படுகின்றது. பஜனை வழிபாடுகளுடன் ஆரம்பமான பூசையானது ஆலய பிரதம குரு சிவஸ்ரீ உத்தம ஜெயதீஸ்வர சர்மா குருக்களின் தலைமையில் நவராத்திரி பூசை விசேட தீபாராதனையுடன் சகலகலா வள்ளி பாமாலை பாடப்பட்டு மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

மூவினங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இணைந்து குறித்த பூஜைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டமை இன நல்லுறவை வெளிக்கொணர்ந்ததோடு இனநல்லுறவை வலுப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

பூசையின் நிறைவில் மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிதிகளினால் சிறார்களுக்கு புத்தகப் பைகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூர் சேதனப் பசளை உற்பத்தியாளர்களுக்கு ஊக்குவிப்பு இல்லை



(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

நாட்டில் இரசாயன பசளை தடை செய்யப்பட்டதை அடுத்து நாட்டில் பெரும்பாலான பிரதேசங்களில் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது அதனடிப்படையில் திருகோணமலை நிலாவெளி கோபாலபுர பிரதேசத்தில் அரசாங்கத்தின் எவ்வித உதவியும் இன்றி சுற்று சூழலில் கிடைக்கும் கழிவுப் பொருட்களை கொண்டு சேதனப் பசளை உற்பத்தி செய்து வருகின்றான் இமாம் தீன் சம்சத் பீபி

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளை தமது வீட்டு சூழலை அண்டிய பிரதேசங்களில் கிடைக்கும் கழிவு பொருட்களினால் இவ் சேதன பசலையினை உற்பத்தி செய்வதாக அவர் தெரிவித்தார்.

குடும்பத்தாரின் எவ்வித உதவியும் இன்றி அரசாங்கத்தின் எவ்வித ஊக்குவிப்பும் இல்லாமல் இவ்வாறு சேதனப் பசளை உற்பத்தி செய்து வருவதாக தெரிவித்த இமாம் தீன் சம்சத் பீபி

தன்னைப் போன்று பல கிராமங்களில் பல சேதனப் பசளை உற்பத்தியாளர்கள் இருப்பதாகவும் அவர்களை இனங்கண்டு உரிய முறையில் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு ஊக்குவிப்பு மேற்கொண்டால் வெளிநாடுகளிலிருந்து இவ்வாறு சேதன பசளைகளை இறக்குமதி செய்யத் தேவையில்லை எனவும் தெரிவித்தார் தனக்கு இவ்வாறு சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்பதற்கு ஒரு தள்ளு வண்டியில் கூட இல்லாமல் இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் சேதன பசளைகளை உரிய விதத்தில் பராமரிப்பதற்கு மற்றும் கலங்கிய படுத்துவதற்கு போதிய இடம் இல்லாமையினால் பெரும் கஷ்டத்தின் மாதம் ஒன்றுக்கு சுமார் 300 தொடக்கம் 500 கிலோகிராம் வரை தாம் சேதன பசளை உற்பத்தி செய்வதாகவும் இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளை ஒரு கிலோ கிரேம் ரூபா 50க்கு மாத்திரமே தாம் விற்பனை செய்வதாகவும் தெரிவித்தார்

தமக்கு அரசாங்கமோ அல்லது தனியார் தொண்று நிறுவனங்களோ உரிய விதத்தில் சேதனப் பசளை உற்பத்திக்கு வளங்களை அமைத்து தருவார்களே ஆனால் தம்மால் நிலாவெளி பிரதேசத்திற்கு தேவையான சேலைகளை உற்பத்தி செய்ய முடியும் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே அதிமேதகு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களினால் சேதனப் பசளை உற்பத்திக்காக பல ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் அவை சரியாக உரிய நபர்களிடம் கொண்டு சேர்க்கப்படுவது உரிய அதிகாரிகளின் பொறுப்பு எனவும் தம்மைப் போன்ற சேதனப் பசளை உற்பத்தியாளர்களை உடன் அணுகி சேதனப் பசளை உற்பத்தியை மென்மேலும் ஊக்குவிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்

# திருமலையில் 17 வயது மாணவி எரியூட்டப்பட்டு கொலை

(அ.அச்சுதன்)

திருகோணமலை ஆலங்கேணியைச் சேர்ந்த செல்வி கேதீஸ்வரன் சாமினி (வயது1%) என்ற மாணவி எரியூட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார் .

இந்நிலையில் சந்தேகத்தின்பேரில் அக்கிராமத்தைச் சேர்ந்த தேவராஜா கபில்ராஜ், உருத்திரமூர்த்தி அருள் ஆகிய இரு இளைஞர்கள் கிண்ணியா பொலிசாரினால் கைது செய்திருந்தனர்.

இக்கொலை தொடர்பான வழக்கு விசாரணை திருகோணமலை நீதிமன்றத்தில் விசாரணைக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்



பட்டபோது வழக்கு விசாரணை 2%ம் திகதி வரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இது தொடர்பான வழக்கு விசாரணை மேல் நீதிமன்றத்தில் 25.10.2021 அன்று இடம்பெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இக்கொலைச் சம்பவம் 10.04.2021 அன்று அதிகாலை 3.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

எரியூட்டப்பட்ட மாணவி கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் 25.04.2021 அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

குறித்த மாணவியின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட தேவராஜா கபில்ராஜ், உருத்திரமூர்த்தி அருள் ஆகிய இரு இளைஞர்கள் திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை பிணையில் எடுப்பதற்கு அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் முயற்சித்து வரும் நிலையில் இவர்களை வெளியே விட்டால் இன்னும் பல பெண்களின் வாழ்க்கையை சீரழிப்பார்கள் இவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என அக்கிராம மக்களும் சமூக ஆர்வலர்களும் தெரிவித்து வருகின்றார்கள். அத்துடன் இவர்களுக்காக மனச்சாட்சியுள்ள எந்த சட்டத்தரணிகளும் ஆஜராகக்கூடாது என்றும் தங்களுடைய ஆதங்கங்களை வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

ஆலங்கேணி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற இம் மாணவி சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்று வந்தார். இவர் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகக்கூடியவராகவும் விளங்கினார். இவருடைய இழப்பு பாடசாலைக்கும் பெரியதொரு இழப்பாக கருதப்படுகின்றது.

# பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கி வைப்பு



ந.குகதர்சன்

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம் திட்டம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி மற்றும் கோறளைப்பற்று மத்தி ஆகிய பிரதேச செயலக பிரிவில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள பதினாறு வீடுகளிற்கான பயணாளிகளுக்கு ஒரு இலட்சம் பெறுமதியான முதலாம் கட்ட காசோலைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நசீர் அஹமட் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பயணாளிகளுக்கான காசோலைகளை வழங்கிவைத்துள்ளார்.

இதன்போது தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் ஓட்டமாவடி மற்றும் கோறளைப்பற்று மத்தி ஆகிய பிரதேச செயலக பிரிவில் நிர்மானிக்கப்படவுள்ள வீடுகளிற்கான பதினாறு பயனாளிகளுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் பதினாறு இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கிவைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட முகாமையாளர் கே.ஜெகநாதன், ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். நௌபர், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ்;, வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபள்யூ.எம்.சந்திரகுமார, பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன், பிரதேச சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பு செயலாளர் ஏ.ஏ.நாசர், ஏறாவூர் நகர சபை முன்னாள் தவிசாளர் எம்.எல். தஸ்லீம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுற்ப உத்தியோகத்தர் எஸ்.எல்.நளீர் மற்றும் பிரதேச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் நிறுவனங்களின் தலைவர்கள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அரசாங்கம் மீண்டும் ஒரு பாடசாலை கோத்தனியை உருவாக்க முயற்சிக்கின்றதா?

## இராதாகிருஸ்ணன் கேள்வி

(க.கிஷாந்தன்)

கொழும்பு மாவட்டத்திற்கு மாத்திரம் பாடசாலை மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசியை வழங்கிவிட்டு பாடசாலையை ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சி செய்வது மீண்டும் ஒரு பாடசாலை கொரோனா கொத்தனியை உருவாக்குவதற்கா?என்ற கேள்வி உருவாகின்றது.என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

அட்டனில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அறிவித்தலின் படி அடுத்து வருகின்ற நாட்களில் கொழும்பு மாவட்டத்தின் பாடசாலை மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசியை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதுடன் அதனை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பதாக நிறைவு செய்யவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இதனை தொடர்ந்து ஏனைய மாவட்டங்களுக்கு தடுப்பூசியை வழங்குவதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் தெரியவருகின்றது.இதனை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.ஏனெனில் மாணவர்கள் அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும்.அப்படியானால் அனைத்து மாணவர்களுக்கும் தடுப்பூசியை வழங்கிய பின்பு பாடசாலையை ஆரம்பிக்க வேண்டும்.

அப்படி இல்லாமல் கொழும்பில் இருக்கின்ற மாணவர்களுக்கு ஒரு சலுகையும் ஏனைய மாணவர்களுக்கு ஒரு சலுகையையும் செய்ய முற்படுவது மிகவும் தவறான ஒரு செயற்பாடாகும்.



நான் முன்னாள் இராஜாங்க கல்வி அமைச்சர் என்ற வகையில் இந்த செயற்பாட்டை பிழையான ஒரு முன் உதாரணமாகவே கருதுகின்றேன்.மாணவர்கள் மத்தியில் தேவையற்ற பிரச்சினைகளை இது உருவாக்கும் எனவே அனைத்து மாணவர்களுக்கும் ஒரே தடவையில் அல்லது படிப்படியாக தடுப்பூசியை வழங்கிய பின்பு பாடசாலையை ஆரம்பிப்பதே பொருத்தமானதாக இருக்கும்.

இன்றைய சூழ்நிலையில் ஆசிரியர்கள் ஒரு புறம் தொடர்ச்சியாக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள்.அவர்களுடைய கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறான ஒரு நிலையில் பாடசாலைகளை ஆரம்பிப்பது என்பது கேள்விக்குறியான சாத்தியமான செயற்பாடாக தெரியவில்லை.ஆசிரியர்களும் அதிபர்களும் இல்லாமல் எவ்வாறு பாடசாலைகளை ஆரம்பிப்பது என்ற கேள்வி எழுகின்றது.

எனவே இந்த அனைத்து விடயங்களையும் அரசாங்கம் கருத்தில் கொண்டு மாணவர்களின் நன்மை கருதி சரியான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

# இந்திய இராணுவ தளபதி திருகோணமலை விஜயம்



(பொன்ஆனந்தம்)

இந்திய இராணுவ தளபதி ஜெனரல் மனோஜ் முகுந் நரவானே நேற்று திருகோணமலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராளவை அரசாங்க அதிபர் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்திய இராணுவத் தளபதியால் அரசாங்க அதிபருக்கு நினைவுப் பரிசில் வழங்கப்பட்டதுடன் மாவட்ட அரசாங்க அதிபரும் இந்திய இராணுவ தளபதிக்கு நினைவு பரிசிலொன்றை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.இதன் போது எடுக்கப்பட்ட படங்களைக்காண்க.

# மருத்துவமனைக்கான அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் இயந்திரம் வழங்கி வைப்பு

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை மாவட்டத்தில் அதிகம் சிறுநீரக நோயினால் பாதிக்கப்படும் பிரதேசங்களில் ஒன்றான பதவிஸ்ரீபுரா பகுதியும் ஒன்றாகும் இப்பகுதியில் பகுதியில் சுமார் 500 க்கும் அதிகமான சிறுநீரக நோயாளிகள் பதிவாகுபதிவாக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது

அவ்வாறு பதிவாகும் சிறுநீரக நோயாளிகள் சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலை அல்லது அனுராதபுரம் பொது வைத்திய சாலையினை பல கிலோமீட்டர் தூரம் பயணம் செய்யது சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை ஏற்றப்பட்டது

பதவி ஸ்ரீபுரா வைத்திய சாலையில் அல்ட்ராசவுண்ட் மற்றும் ஸ்கேன் இயந்திரம் இல்லாததால் சிறுநீரக அலகு பராமரிக்க முடியாத சூழ்நிலை ஏற்றப்பட்டது இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துகோரள அவர்களின் கவனத்திற்கு கொண்டு வாதத்தினை அடுத்து



சுகாதார அமைச்சர் வைத்தியர் சன்னா ஜெயசுமன அவர்களினால் பதவி ஸ்ரீபுர வைத்திய சாலைக்கு அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் இயந்திரம் வழங்கிவைக்கப்பது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துகோரள மற்றும் அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் மரணப் பொறியில் எனும் வாசகம் அடங்கிய துண்டுபிரசுரங்கள் திருகோணமலையில் விநியோகம்

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

மக்கள் மரணப் பொறியில் எனும் வாசகம் அடங்கிய துண்டுபிரசுரங்கள் விநியோகம் செய்யப்ட்டுள்ளதக தெரிவிக்கப்படுகின்றது.




திருகோணமலை சீனக்குடாவில் அமைந்துள்ள இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் முன்பாக தொழில் போராட்ட மத்திய நிலையத்தினரால் பகிர்ந்தளிக்கப்பட்டது.

திருகோணமலையில் அமைந்துள்ள குறித்த நிறுவனத்தினை இந்தியாவுக்கு முழுவதுமாக வழங்க அரசு திட்டமிட்டுள்ளதுடன் இலங்கைக்கு உருத்தான எண்ணெய் தாங்கிகளையும் இந்தியாவுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த நிறுவனத்தின் ஊழியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் அவ் துண்டு பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

பெரும் தொற்றின் மூன்றாவது அலை ஓய்ந்து வருகிறது. இது பெரும்தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு சரியான நேரத்தில்,சரியான முடிவு எடுக்காமல் பெருமளவு உயிர்களை கொண்று இழப்பீடு செலுத்த நேரிட்டது அது மாத்திரமல்லாது பெரும்பாலானோரின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது இந்நிலையில் வரி ஏய்ப்பு செய்து திருடர்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்கியது

நாட்டில் சம்பாதித்த பணத்தை கருப்பு பணமாக வேறு நாடுகளுக்கு எடுத்துச் சென்ற உறவுகளை பற்றி பண்டோரா பேப்பர்ஸூம்,பனாமா பேப்பர்ஸூம் அம்பலத்திற்கு கொண்டு வந்துள்ளன. இவை குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என்பதை உறுதியாக கூற முடியும் இதற்கு மத்தியில் இந்நாடு தற்போது மிகவும் தீர்க்கமான இடத்திற்கு வந்துள்ளது.

கேரவலபிட்டிய மின் நிலையத்தை எல்.என்.ஜி (இயற்கை திரவ எரிபொருள்) ஆக்கும் போர்வையில் அதன் 40 வீதத்தை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு விற்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அதே போன்று இந்த ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் மின்வலு நிலையங்களுக்கு ஃமீள வழங்கப்படுவதற்கான ஏகபோகம் வழங்கப்பட்டுள்ளது. இதனூடாக எதிர்காலத்தில் நாடு என்ற வகையில் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

விசேடமாக மின்சக்தியின் உரிமை அந்நாட்டு அரசிடம் இருக்க வேண்டும் அது வேறொரு நாட்டின் நிறுவனத்தின் கைகளுக்கு சென்றால் அரிசி மாபியாக்கள் அரசாங்கத்தை நிர்வகிப்பது போன்று நாளை மின்சக்தி ஊடாக நாட்டின் பொருளாதாரத்திற்கு அரசியலுக்கு வற்புறுத்தல் செய்யும் ஆற்றல் அந்த நிறுவனங்களுக்கும் அந்த நிறுவனங்களுக்கு உரிய நாடுகளுக்கும் கிடைக்கும்.

அது மாத்திரமல்லாது இப்போது திருகோணமலை எண்ணெய் குதங்களை பெரும்பாலானவை இந்தியாவிற்கு வழங்க அரசாங்கம் தயாராகி வருகிறது கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனை 51வீத பங்குகள் இந்திய நிறுவனம் ஒன்றுக்கு விற்கப்பட்டுள்ளன கொழும்பு துறைமுகத்தின் முக்கியத்துவம் வாய்ந்த 8 ஏக்கர் நிலம் சீனாவிற்கு விற்கப்படுகிறது இதனால் தற்போது கப்பல்களுக்கு வசதிகளை வழங்குவதால் துறைமுக அதிகாரசபை கிடைக்கும் முழு வருமானமும் பறிபோகும் இதேபோன்று மசகு எண்ணெய் சட்டத்தை திருத்தி இலங்கைக்கு மசகு எண்ணெய் இறக்குமதி செய்யும் விநியோகிக்கும்,சுத்திகரிப்பு மற்றும் உற்பத்தி செய்யும் உரிமையை மேற்படி நிறுவனங்களுக்கு வழங்க அரசாங்கம் தயாராகிறது இதற்கான சட்டமூலம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமல்லாது பலாலி விமான நிலையத்தையும் காங்கேசன்துறை துறைமுகத்தையும் இந்தியாவிற்கு வழங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன மத்தள விமான நிலையமும் அந்தப் பட்டியலில் இருக்கின்றது தேசாபிமான முகமூடியை போட்டுக்கொண்டே இவ்வளவையும் செய்கிறார்கள் இவை அனைத்தும் ஒருபுறம் நடக்கும்போது மறுபுறம் உரம் இல்லாமல் அடுத்த போகத்தில் பயிர் செய்வது எப்படி என்ற பிரச்சினைக்கு விவசாயிகள் முகம் கொடுத்துள்ளார்கள்.

இது மாத்திரமன்றி எதிர்காலத்தில் உணவு தட்டுப்பாட்டுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது நாடு பூராவும் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ள நிலையில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு சரியாக தடுப்பூசி வழங்காமல் பல்கலைக்கழகங்களை மூடி உள்ளார்கள் பல்கலைக்கழகங்களை திறந்தால் கல்வியை விலைபேசும் சட்டமூலத்தை கொண்டுவர முடியாது என்பதால் கூடுமானவரை பல்கலைக்கழகங்களை மூடி வைப்பது அரசாங்கம் திட்டமிடுகிறது

இவற்றை பார்க்கும் போது அமெரிக்க,சீன இந்திய அதிகார போட்டியில் நாங்கள் சிக்கியுள்ளது தெரிகிறது இந்த ஆட்சியாளர்கள் தமது இருப்பிற்கான இந்நாட்டு காணிகளில் மக்கள் சொத்துக்களை உலக பலவான்களுக்குக்கு விற்கின்றார்கள். சரியாக காணிகளை வீடுகளை விற்கும் ரியல் எஸ்டேட் நிறுவனங்களைப் போல அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அடுத்த வருடத்தில் சமாளிப்பதே தவிர மேலும் 10 வருடங்களில் 30 வருடங்களில் 50 வருடங்களில் இந் நாட்டின் அடுத்த தலைமுறை செலுத்த வேண்டிய இழப்பீடு குறித்து எந்த பொறுப்புணர்வும் கிடையாது

இந்த பொறியில் சிக்க வைப்பது நாட்டு மக்களால் இழப்பீடு வழங்க நேரிடும் உலக வளங்களின் இந்தப் போட்டிக்கு முன்பாக எதிர்காலத்தில் நாம் அனைவரும் உலக யுத்தம் ஒன்று தள்ளப்படலாம் அப்படி நடந்தால் இந்நாட்டின் ஒவ்வொரு அங்குல நிலமும் ஒவ்வொரு உயிரும் அந்த யுத்தத்தில் சிக்குவது தவிர்க்கவியலாது

இந்த சூதாட்ட சூதாட்டத்திற்கு பலியாவது நாமும் எமது பிள்ளைகளும் தான் எனவே இப்போது கண்களை திறந்து பாருங்கள் என்று எமது நாட்டு மக்களிடம் கேட்கிறோம் இந்த அழிவு என்பது ஒரு கட்சியை அல்லது இரண்டை பாதிக்கக் கூடியது அல்ல முழு நாட்டையுமமே பாதிக்கும் ஆகவே இவற்றிற்கு எதிராக நீங்கள் முன்வர வேண்டும் உங்களது திட்டமிட்ட அதிகாரமின்றி இந்த அழிவை தடுக்க முடியாது

சிலர் இந்த அழிவை விரும்பலாம் அடுத்த தேர்தலில் வெற்றிபெற மனிதர்களின் தலைகளை கழுவுவதற்காக அவர்கள் இந்த அழிவினை பயன்படுத்தலாம் ஆனால் தேர்தல் ஒன்றின் மூலம் எவரையாவது நிறுத்தினால் இந்த அழிவு மாறாது அதற்கு மக்கள் ஒருங்கிணைய வேண்டும் எனவே ஒருங்கிணைய முன்வாருங்கள் என்று தொழிலாளர்களை,ஊழியர்களை,விவசாயிகளை,மீனவர்களை, இளைஞர்களை,மாணவர்களை,பெண்களை,ஒடுக்கப்பட்ட தமிழ் முஸ்லிம் மக்களை நாம் வேண்டிக்கொள்கிறோம்

பிரச்சினைகளோடு நாளாந்தம் போராடும் உங்களுக்கு இந்தக் குரல் கொஞ்சம் தூரமாக தெரியக்கூடும் ஆனால் நாளை இந்தப் பாதையை தவிர வேறு பாதை உங்களுக்கு இல்லை ஆகவே உழைக்கும் மக்கள் அதிகாரத்தை கட்டியெழுப்ப மக்கள் இயக்கத்தை கட்டியெழுப்ப எங்களோடு ஒருங்கிணையுமாறு உங்களிடம் வேண்டிக் கொள்கின்றோம் என இன்று திருகோணமலையில் விநியோகிக்கப்பட்ட துண்டு பிரசுரத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது .

# மன்னார் காலபோக விவசாய செய்கைக்கு முதலாவது நீர் விநியோகம்

## விவசாய கூட்டத்தில் தீர்மானம்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் 31339 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட இருக்கும் ; இவ் நடப்பு வருட காலப்போகத்துக்காக கட்டுக்கரைக்குளத்திலிருந்து முதலாவது நீர் விநியோகம் 26.10.2021 அன்று ஆரம்பிக்கப்பட்டு. இறுதி நீர் விநியோகம் 28.02.2022 வரை இடம்பெறும் என விவசாய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மன்னார் அரசாங்க அதிபர் திருமதி திருமதி ஸ்ரான்லி டீமெல் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் பிரதான குளமாகிய கட:டக்கரைக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் 2021, 2022 ஆம் ஆண்டுக்கான பெரும்போக பயிர் செய்கை கூட்டமானது வியாழக்கிழமை உயிலங்குளம் மாவட்ட விவசாய பயிச்சி நிலையத்தில் நடைபெற்றது.

இதில் விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட சகல திணைக்களத் தலைவர்கள் மற்றும் விவசாயிகள் இவ் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக மன்னார் அரசாங்க அதிபர் திருமதி திருமதி ஸ்ரான்லி டீமெல் தெரிவிக்கையில்

இவ் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் பயிர் செய்கை அபிவிருத்தி சம்பந்தமான விடங்கள் ஆராயப்பட்டது.

இதன் அடிப்படையில் தற்பொழுது கட்டுக்கரைக்குளத்தில் 7 அடி 8 அங்குலம் நீர் காணப்படுகின்றது.

அத்துடன் இங்கு விவசாயிகளின் நலன் கருதி சிறிய குளங்களையும் நீரால் நிரப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ் காலப்போகத்தில் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் 31339 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர் செய்கை செய்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இவ் நடப்பு வருட காலப்போகத்துக்காக கட்டுக்கரைக் குளத்திலிருந்து முதலாவது நீர் விநியோகம் 26.10.2021 அன்று ஆரம்பிக்கப்பட்டு. இறுதி நீர் விநியோகம் 28.02.2022 வரை இடம்பெறும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் பயிர் செய்கை காலத்தில் கால்நடை பராமரிப்பு தொடர்பாகவும் இக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இதன் அடிப்படையில் கால் நடைகளை புல்அறுத்தான் கண்டல், பெருவழி, தேத்தாவாடி ஆகிய இடங்களில் பட்டி அமைத்து பராமரிக்க வேண்டும் எனவும் கால்நடை பண்ணையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ் கால்நடைகளை பராமரிப்பதற்காக ஐம்பது மாடுகளுக்கு ஒருவர் என்ற வீதத்தில் நபர்களை ஒழுங்குபடுத்துமாறும் கால்நடை பண்ணையாளர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் இவ்வாறு அரச அதிபர் தெரிவித்தார்.

# நிந்தவூரில் சுரகிமு கங்கா ஆறுகளை பாதுகாக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம்

(நிந்தவூர் நிருபர்)

''சுரகிமு கங்கா'' ஆறுகளை பாதுகாக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2021ன் 1ம் கட்ட நிகழ்வாக கழியோடை ஆற்றங்கரையில் பழ மரக்கன்றுகளும், மூங்கில் மர கன்றுகளும் நடுவது தொடர்பான கலந்துரையாடல் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லத்திப் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.



ஆறுகளை பாதுகாக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற ஆறுகளையும் அதன் கரையோரங்களினையும் பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் இப்பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாக நிந்தவூர் பிரதேச செயலாளர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர், பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் (கல்முனை), உதவிப்பணிப்பாளர், வனபராமரிப்பு திணைக்களம், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி (சம்மாந்துறை), விவசாய போதனாசிரியர், கோட்டக்கல்வி அதிகாரி, பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர், கிராம நிருவாக உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் (சுற்றாடல் பிரிவு) மற்றும் விவசாயிகளின் பிரதி நிதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.